திராவிடநாடு

29-4-56 | வார வெளியீடு | விலை 2 அணா

திருச்சி

அழைக்கிறது

திராவிடத்தீர்!

தீர முடிவு

எடுக்க

திரண்டு

வாரீர்!

கேட்டீரா சேதியை!

"சில இடங்களில் கால்கோல் விழா நடத்துவதுடன் காரியங்கள் முடிந்துவிடுகின்றன. கட்டிடங்கள் எழும்புவதில்லை. அண்மையில் கட்ஜு ஒரு கட்டிடத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். கட்டிடம் எழும்பாததுமட்டுமல்ல, அஸ்திவாரக் கல்லே மறைந்துவிட்டது"—இப்படிப் பேசியது யார் தெரியுமா? பிரதமர் நேரு பண்டிதர்தான். தேதி ஏப்ரல் 6; இடம் அலகாபாத்,

*

"நமக்குப் பிரயோசனமில்லாத காமன்வெல்தில் நாம் இருக்க வேண்டுமா என்பதையும் ஆலோசிக்கவேண்டும். காமன் வெல்தில், 'காமனுக' (பொதுப படையாக) எதுவும் இல்லை; பங்குபோட்டுக்கொள்ள 'வெல்த்' (செல்வம்) இல்லை. நம் நாட்டைச் சுரண்டிக் கொள்ளையடித்து, தாங்கள் பணக்காரர்களாகி, நம்மை வறுமையில் விழ்த்திய பிரிட்டிஷார்தான் இப்பொழுதும் நம் பொருளாதாரமீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். எனவே, இந்தக் காமன்வெல்திடம் காதல் ஏன்? கோவா போரில் நம்மை ஆதரிக்காத பிரிட்டிஷாரிடம் ஏன இந்த உறவு?" என்று புதிதாக அரும்பியுள்ள "சுதந்திரம்" எனும் ஏட்டில், எச். டி. ராஜா எம். பி. எழுதுகிறார். அவர் ஒரு தி. மு. க. அல்ல!!

*

"கலாச்சார தூதுக் குழுவிற்காக நாம் பெரும் தொகையைச் செலவழிக்கிறோம். 20 நபர்களை மட்டுமே கொண்ட ஒரு கலாச்சார தூதுக் குழு அண்மையில் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளுக்குச் செல்ல இருக்கிறது. அதற்காக ரூ. 2,30,000 செலவிடப்பட இருக்கிறது. பண்பாடு தூதுக் குழு அவசியம்தான். அதற்காக வெறும் நாட்டியம் ஆடிக் காட்டுவதற்காக துணை அமைச்சர் தலைமையில் ஒரு தூதுக் குழு செல்லுவதைப் பொறுத்தவகையில் விரையமாகும்" என்று டில்லி பார்லிமெண்டில் தோழர் அவினாசிலிங்கம் கடந்த 16ந்தேதி பேசியிருக்கிறார்.

*

வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு தென்னிந்தியாவிலுள்ள சிறப்பான இடங்களை ஏன் காட்டுவதில்லை என்று டில்லி பார்லிமெண்டில் கடந்த 3ந்தேதி ஒருவர் கேட்டதற்கு 'நம்ம' இரயில் மந்திரி ஓ. வி. அழகேசன் என்ன சொன்னார் தெரியுமா? "குறுகிய காலமே இங்கு வெளிநாட்டினர் தங்கியிருக்கவேண்டியிருப்பதாலும், இந்தியாவின் பல்வேறு முககியமான இடங்களை அவர்கள் காணத் தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதாலும், அவர்கள் காணவேண்டிய இடங்களில் தென்னிந்தியாவைச் சேர்ந்த சில பகுதிகள் சேர்க்கப்படாமல் விட்டுவிடப்படுகின்றன" எப்படி பதில்? ஐயோ, தமிழகமே!

*

புல்கானினும் குருஷேவும் இங்கிலாந்துக்குப் போயிருக்கிறார்கள்ல்லவா? அவர்கள் இலண்டனுக்கு வருவதை ஆட்சேபித்து பத்து அடி நீளமுள்ள ஸ்பூன் ஒன்றும், சவப்பெட்டியில் வைக்கப்படும் புல் கட்டு ஒன்றும் ஏப்ரல் 18-ந்தேதி பிரிட்டிஷ் பிரதமர் ஈடனிடம் கொடுக்கபபட்டதாம். 'பிசாசுடன் விருந்துண்ண நீண்ட ஸ்பூன் தேவை" என்பது இங்கிலாந்தில் வழங்கும் பழமொழி.

*

"விந்தியத்திற்குத் தெற்கில் கனரகத் தொழில்களை நிர்மாணிக்க எந்த ஒரு பகுதியும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது எனக்கு ஆழ்ந்த ஏமாற்றத்தைத் தருகிறது. வெளிப்படையாக இருந்துவரும் தடைகளை ஒரு பொருட்டாக மதிக்காது, தெற்கை ஒரு சிறந்தத் தொழில் பகுதியாக ஆக்கும் முயற்சியை மேற்கொள்ளவேண்டும். தெற்கில் கனரகத் தொழில்கள் நிறுவப்படாதது கண்டிக்கத் தக்கதாகும். இப்பெருந் தொழில்களை நிர்மாணிப்பதற்கு சென்னையை விட பீகார், ஒரிசா, போன்ற பிரதேசங்கள் தகுதிவாய்ந்தவைஎன எண்ணப்படுகிறது" என்று சர். சி. பி. குரோம்பேட்டை சென்னை இயந்திர நுணுக்கக்கலைப் பயிற்சி பள்ளி விழாவில்; ஏப். 16-ந்தேதி பேசியுள்ளார்.

*

டில்லி பார்லிமெண்டில் ஏப். 15-ந்தேதி நிகழ்ந்தது, இது:

கேள்வி:- கராச்சியிலுள்ள காளியின் ஆபரணங்களைக் குண்டர்கள் களவாடிப் போய்விட்டனர் என்பதும் கோயிலைச் சுற்றியுள்ள குண்டர்கள் பயமுறுத்துவதால் இந்துக்கள் இக்கோயிலில் தொழபயப்படுகிறார்களென்பதும் உண்மையா?

நேரு:- இதுபற்றி எனக்குத் தெரியாது. நான் நகைகளைப் பறறி எதுவும் கேள்விப்படவுமில்லை. எனக்கு அவற்றில் சிரத்தையும் இல்லை. நகைகள் ஏன் தொழுகையின் அம்சமாக இருக்கவேண்டுமென்பதும் எனக்குப் புரியவில்லை. நகைகளைக் கடலில் எரிவதே சிறந்தது.

*

புது டில்லி பார்லிமெண்டில் ஏப்ரல் 9ந்தேதி:—சேலம், திருச்சி வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, கோவை, மலபார், நீலகிரி, புதுக்கோட்டை முதலிய எட்டு இடங்களில் தமிழ்நாட்டில் இரும்புக் கனிகள் கிடைப்பதாக இனறு இயற்கை வசதி இலாகா மந்திரி கே. டி. மாளவியா கூறினார். சேலம், திருச்சி, இரும்புக் கனிகளே முக்கியத்துவம் வாய்ந்தவை. காஞ்சாமலை, கோடுமலை, பெருமலை, புதுப்பாளையம், ஆத்தூர், சிங்கிலியன், கோம்பை, கித்தேரி, தீர்த்தமலை, இராசிபுரம், நாமக்கல், பச்சைமலை முதலிய இடங்களில் இரும்புக் கனிகள் கிடைக்கின்றன என்றும் கூறினார்.

*

காவிரி டெல்டாவில் எண்ணெய்ச் சுரங்கங்களிருக்க வேண்டுமென்று ரஷ்ய விஞ்ஞானிகள் முடிவுகட்டியிருக்கிறார்கள்.

*

சென்னை ஏப் 5:- "கிண்டி பொறி இயல் கல்லூரியை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட சென்னை அரசாங்கம் சம்மதித்துள்ளது"—சி. சுப்பிரமணியம்.

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 43
29-4-56

நாக நாடு--புதிய கட்டம்

மனுப் போடும் காலம்
மகஜர் அனுப்பும் காலம்
மக்கள் மன்றத்தில் முழக்கமிடும் காலம்
ஒத்துழையாமை நடத்தும் கட்டம்
கிளர்ச்சிகளில் ஈடுபடும் கட்டம்
அடக்குமுறைகளைத் தாங்கும் கட்டம்

நாக நாடு கேட்டுக் கிளர்ச்சி நடத்தும் விடுதலை விரும்பிகள், இந்தக் கட்டங்களைக் கடந்துவிட்டனர்.

இப்போது நாகர் தலைவன் பிசோவின் தலையைக் கொண்டுவருபவருக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு தரப்படும், என்று டில்லியிலுள்ள ஏகாதிபத்ய சர்க்கார் அறிக்கைவிட்டிருக்கும் கட்டம் காண்கிறோம்.

ஐயாயிரம்—தலைவன் தலைக்கு!! ஒரு நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுகிறான் — பட்டம், பதவி —எதனையும் விரும்பாமல்—அவன் வேட்டையாடப் படுகிறான்-வெள்ளையரை வெறியர் என்று கண்டித்த கண்ணியவான்கள் ஆட்சியில்.

நாகர் தனி இனம்! நாக நாடு, தனிஅமைப்பு! குன்றுகளே பெரிதும் இருக்கலாம் — எனினும் எவருக்கும் தலைவணங்கி, தாள்பற்றி நாங்கள் நின்றதில்லை. நாக நாடு நாகர்க்கே—என்று முழக்கமிடுகிறான் ஓர் விடுதலை விரும்பி-அவன் தலையைக் கொண்டுவரச் சொல்லி, காசாசை ஊட்டுகிறார்கள், தேசீயம் பேசியவர்கள்.

ஐயாயிரமா! எம் தலைவன் தலைக்கா! எங்களில் மாற்றானின் தலையை வெட்டுவது மதச் சடங்காகக் கொண்டவர்கள்கூட உண்டு — ஆனால் எமது தன்மானத்துக்காகத் தளராது போரிடும் தலைவனுடைய தலையையா கொண்டுவரச் சொல்கிறீர்கள். ஒரு தலை என்ன, இதோ ஐந்து தலைகள் தருகிறோம்—என்று கூறி, டில்லியுடன் கூடிக்கொண்டு நாகநாட்டுக்குத் துரோகம் செய்ய முனைந்த தலைவர்களின் தலையை வெட்டி வீழ்த்தினர், புரட்சியில் புகுந்துவிட்ட நாகர்கள்.

இராணுவம் வேலை செய்கிறது-விமானம் வட்டமிடுகிறது—உயர்தர இராணுவ அதிகாரிகள் கூடிப் பேசி, நாகர்களின் 'தேசீயப் போர்' ஒழிப்புக்கான திட்டம் தீட்டுகின்றனர்.

இந்திய சர்க்காரிடம் உள்ள படைபலம் ஏராளம்.

நாகர்களிடம், ஜப்பானியரிடமிருந்து சிக்கிய ஆயுதம் மட்டுமே சிறிதளவு இருக்கிறது என்று இந்திய சர்க்காரே கூறுகிறது.

இந்நிலையில், நாகர் கிளர்ச்சி நசுக்கப்பட்டாலோ, நாகர் தலைவன் பிசோ, டில்லியில் சிறைவைக்கப்பட்டாலோ, அல்லது மலைச்சரிவில் சுட்டு வீழ்த்தப்பட்டாலோ, ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வளவு பெரிய சக்தியையும் எதிர்த்து நிற்கும் துணிவு, தேசிய விடுதலைப் போரினருக்கு ஏற்பட்டிருக்கிறதே, அதுதான் ஆச்சரியமானது.

இந்திய இராணுவக் குண்டுகளையும் வீசுகிறது -கொஞ்சு மொழியும் பேசுகிறது! எதற்கும் நாகர்கள் விட்டுக்கொடுப்பதாக இல்லை.

வீர சுதந்திரம் வேண்டுமென்றார்
பின்னர் வேறொன்றும் கொள்வாரோ!

என்று அங்கு எந்தப் பாரதி பாடிக்கொண்டிருக்கிறானோ, யார் கண்டார்கள். இந்திய சர்க்காராகப் பார்த்துத் தருகிற அளவுதான் செய்திகள் கிடைக்கின்றன. பெரும்பாலான செய்திகளுக்கு, இருட்டடிப்பு!

நாகர்கள்—அண்டை ராஜ்யங்களிலே கள்ளத்தனமாக நுழைகிறார்கள்—கண்காணித்து வாருங்கள்—என்று இந்திய சர்க்கார் சென்ற கிழமை ஓர் சுற்றறிக்கை விடுத்திருக்கின்றது.

நாகர்கள், இந்திய ராஜ்யங்களுக்கு உள்ளேயே புகுந்து, டில்லி சர்க்காருக்குத் 'தலைவலி' உண்டாக்கும், திட்டமிட்டு வேலைசெய்கிறார்களோ என்று அஞ்சவேண்டி இருக்கிறது, சர்க்கார் அறிக்கையைப் பார்க்கும்போது. ஏதேதோ எண்ணங்களைக் கிளறக்கூடிய வகையில் மற்றோர் செய்தி, இந்தக் கிழமை வெளிவந்திருக்கிறது.

நாகநாட்டுக் கிளர்ச்சிக்கும் பாகிஸ்தானுக்கும் தொடர்பு ஏதேனும் இருக்கிறதா? ஏற்படுமா? ஏற்பாடாகிக்கொண்டு வருகிறதா? என்ற பல சந்தேகங்கள் எழத்தக்க விதமாக, அந்தச் செய்தி அமைந்திருக்கிறது.

நாக நாடு கிளர்ச்சிக்குப் பாகிஸ்தான் ஆதரவு அளிக்கிறதா என்ற கேள்வி, கராச்சியில் உள்ள பாகிஸ்தான் வெளிநாட்டிலாகா அலுவலகத்துக்கே வந்துவிட்டிருக்கிறது.

அப்படி ஒரு பிரச்சினையே எழவில்லை என்று பாகிஸ்தான் வெளிநாட்டிலாகாவினர் கூறுகின்றனர்.

ஆசியாவில், தனிஅரசு கோரி எங்கேனும் கிளர்ச்சி நடத்தப்படுமானால், ஆதரவு அளிக்கவேண்டும் என்று பாண்டுங் மாநாட்டிலே நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின்படி, நாக நாடு கிளர்ச்சியை ஆதரிக்கவேண்டாமா? என்று கேட்கப்பட்டது — அதற்குப் பாகிஸ்தான் வெளிநாட்டிலாகாவினர், எங்கெங்கு நியாயமான தனி அரசுக் கிளர்ச்சிகள் ஏற்படினும், எமது அன்பான ஆதரவு இருக்கத்தான் செய்யும்-என்று பொதுப்படையாகப்

(18-ம் பக்கம் பார்க்க)

அரிமா நோக்கு!

தம்பி!

ஒரு கருத்தளிக்கும் காட்சிகாண அழைக்கிறேன்—பல நூற்றுண்டு கட்கு முன்பு நடைபெற்றதோர் காட்சி எனினும் இன்றும் எனக்கும் உனக்கும், ஏன், கண்ணியத்தைக் கடைப்பிடிக்கும்போது என்ன கஷ்ட நஷ்டம் ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்ளவேண்டும், எத்துணை மன எரிச்சலூட்டப்பட்டாலும் சகித்துக் கொள்ளவேண்டும் என்ற உறுதியுடன் பணியாற்றும் அனைவருக்குமே மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தரத்தக்கதோர் கருத்தளிக்கும் காட்சி.

பொன்னிறமேனியன், அருளொழுகும் கண்ணினன், சித்தார்த்தனைப் பிறந்து புத்தனான பெரியோன், அமைதியாக நிற்கிறார்—எதிரே, உலகமே என் கால் தூசுக்குச் சமம் என்று கூறுமளவு ஆணவம் கக்கும் கண்கள் கொண்ட வேத மார்க்கத்தவனொருவன், ஆத்திரத்துடன் நின்றுகொண்டிருக்கிறான்.

வேதமார்க்கம் அழிந்துபட்டுக் கொண்டு வந்த காலம் அது. கபிலவஸ்துவிலிருந்து கிளம்பிய கருத்துக் கதிர், இருட்டறிவை விரட்டி அடித்துக்கொண்டிருந்த வேளை. வேள்விகள் வீண் ஆரவாரம், வேத ஒலி வெற்றுரை, சடங்குகள் சத்தற்றவை என்ற எண்ணம், மக்களிடம் ஆட்சி செய்யத் தொடங்கிவிட்ட காலம். இந்த மாறுதலுக்குக் காரணமாக இருந்த புத்தர், அவர் எதிரே இந்த மாறுதலின் காரணமாக, மதிப்பிழந்த மமதைக்காரன் புத்தருடைய உள்ளத்திலே ஓர் உக்கிரமான புயல் கிளம்பும், கடுஞ்சொற்களை அவர் அள்ளிவீசுவார், உடனே காகூ வெனக் கூவிக் கலாம் விளைவிக்கலாம், என்பது அக்கயவனின் கருத்து. அக் கசடன் எண்ணியபடியா புத்தர் இருப்பார்! அதற்கா அவர் புத்தர் ஆனார்!

''அன்பரே! ஒன்று கேட்கிறேன். ஒருவர் மற்றொருவருக்கு அன்பளிப்பாக ஒரு பொருளை அளிக்கிறார். ஆனால் மற்றவரோ அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார். அப்போது அந்தப்பொருள் யாருக்கு உரியது?'' என்று **புத்தர்** கேட்டார்.

வேத மார்க்கத்தவனுக்கு இந்தக் கேள்வியே வேடிக்கையாகப்பட்டது. வேதத்தின் உட்பொருள்பற்றிய கேள்விகள் வியாகரணச் சிக்கல்கள் பற்றிய கேள்விகள், உபநிஷத்திலே சில சந்தேகங்கள், இப்படி ஏதேனும் கேள்விகேட்கக் கூடாதா — என் பாண்டித்தியத்தைக் காட்டி இருப்பேனே! இந்தப் புத்தர், சிறுவர்களுக்கும் எளிதில் விளங்கும் விஷயமாக ஒரு கேள்வி கேட்கிறாரே சேச்சே! என்ன கேவலம் இது—என்று எண்ணிக்கொண்டு, அலட்சியமாக,

''ஒருவர் தந்த பொருளை மற்றவர் வேண்டாம் என்று கூறிவிட்டால், அப்பொருளை அளிக்க முற்பட்டவருக்கே, அந்தப் பொருள் உரிமையாகும்'' என்று பதிலளித்தான்.

''சரி! இப்போது நீர் எனக்கு அளித்த வசைமொழிகளை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அதை நீரே வைத்துக்கொள்ளும்'' என்றார் புத்தர். வேதமார்க்கத்தவன் திகைத்துப் போனான் — வெட்கமுமடைந்தான் - ஏனெனில் தந்த பொருளை பெற்றுக்கொள்ள மறுத்து விட்டால், தந்தவருக்கே அப்பொருள் மீண்டும் வந்து சேர்ந்துவிடும் என்ற தத்துவத்தின்படி, புத்தர் மீது புரோகித மார்க்கத்தான் பூட்டிய வசைமொழிகள் அத்தனையும் திரும்ப அவனிடமே அல்லவா வந்துவிடுகின்றன! அந்த வசை மொழிகளுக்கு அவனே அல்லவா உரிமையுள்ளவனாகிவிடுகிறான். எவ்வளவு கேவலமான வசை மொழிகளை வீசினான்.

கெடுமதியாளன்
மதத்துரோகி
வேதநிந்தகன்
நாத்திகன்
நாசமாய்ப்போவான்
நரகம்சேர்வான்

அவன் வீசிய வசை மொழிகளிலே, இவை தரத்தில் சிறிதளவு உயர்ந்தவை! இவையும் இவற்றினைவிட மட்டமான இழி மொழிகள் அத்தனையும், புத்தர் திருப்பி அல்லவா தந்துவிட்டார்! யாரிடமிருந்து கிளம்பினவோ, அவனிடமே அல்லவாஅவை வந்து சேர்ந்து விட்டன! வெட்கப்பட்டான் — அதுமட்டுமல்ல - புத்தருடைய பேரறிவு, அவன் மனதை வென்றுவிட்டது எத்துணை அடக்கம்? என்ன விநயம்? எவ்வளவு திறம்பட என் கேவலத் தன்மையை நானே உணரும்படிச் செய்துவிட்டார்! இவர் உத்தமர், ஐயமில்லை! உயர்ந்தோர், அட்டியில்லை! புத்தர் இவரே, புவி எங்கும் இதனை எடுத்துரைப்பேன், என்றெல்லாம் அவன் உள்ளம் எண்ணிற்று.

தம்பி! அடிக்கடி என்னிடம் நீ மல்லுக்கு நிற்கிறாய்—மாற்றார்கள்—உற்றார்களாக இருக்கவேண்டியவர்கள் கூட—தம் மனம்போன போக்கிலே நம்மைக் கேவலமாகப் பேசுகிறார்கள் பழிச்சொற்களை வீசுகிறார்கள் — இழிவாகப் பேசுகிறார்கள்-கேட்கச் சகிக்கவில்லை-வேதனையாகவும் இருக்கிறது —ஆத்திரமாகவும் இருக்கிறது—ஏன் நாம், பதிலளிக்கக்கூடாது-ஏன் நாம் அவர்களின் குட்டுகளை உடைத்திடத் தயங்கவேண்டும்—அவர்களிடம் உள்ள கொள்கைக் குழப்பங்களையும் முரண்பாடுகளையும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கேவலப் போக்கினையும், சொல்வேறு செயல் வேறாக இருக்கும் தன்மையினையும், ஏன் அம்பலப்படுத்தக் கூடாது என்றெல்லாம் கேட்கிறாய் அல்லவா! எனக்கு, நான் இப்போது உனக்குக் காட்டினேனே காட்சி, இதிலே உள்ள கருத்துதான், வேதனைப் பிறக்கும்போதெல்லாம்துணை நிற்கிறது.

நமது உள்ளத்தில் தூய்மை இருந்தால், தூற்றல்பற்றி நமக்கென்ன கவலை — அது நம்மை என்ன செய்துவிடும்.

தம்பி! தூற்றல் நம்மை என்ன

பழனி

செய்துவிட்டது, நம்முடைய எந்த முயற்சியைக் குலைத்துவிட்டது? எந்த வேலையைக் கெடுத்துவிட்டது? எந்தத் திட்டம் பட்டுப்போயிற்று? வளர்ச்சி பாழ்பட்டதா — கவர்ச்சி கெட்டொழிந்ததா? தூற்றுவோர் தூற்றித் தூற்றி, தமது தூற்றல் ஆற்றலற்றுப் போவது கண்டு மனம்புழுங்கி மேலும் தூற்றிக்கொண்டே காலம் கடத்தி வருகிறார்களே தவிர, இந்தத் தூற்றலின் காரணமாக, நாடு, நம்மிடம் காட்டவேண்டிய நம்பிக்கையைக் குறைத்துக்கொண்டதா? ஆதரவும் அன்பும் நாளுக்குநாள் பெருகிக் கொண்டு வருவதைத்தான் காண்கிறோமே தவிர, பரிவும் பாசமும் வளரத்தான் காண்கிறோமே ஒழிய, நமக்கு என்ன குந்தகம் ஏற்பட்டுவிட்டது? ஒன்றுமில்லை.

"போதுமா, போதுமா?" என்று தான் கேட்கிறார்கள். மிகப் பெரிய அளவில், திருச்சியில் தோழர் சாம்புவின் மேற்பார்வையிலே போடப்பட்டு வரும் கொட்டகையைக் கண்டு. எதற்காக இவ்வளவு பெரிய கொட்டகை? என்று எவரும் கேட்கக் காணோம். நமது வளர்ச்சி, தூற்றலால் துளைக்கப்பட்டிருந்தால், சாம்புவுக்கு இத்தனை பெரிய அல்லல் ஏற்பட்டிராதே! — நிம்மதியாக—கெம்பீரமாக-திருச்சி தேவர் மண்டபத்தில் கூடிக் கலைந்துவிட்டிருக்கலாம். இப்போது தமிழகமே அல்லவா தம்பி, மாநாட்டு வேலையில் ஈடுபட்டிருக்கிறது. துண்டு வெளியீடுகளை ஊரூருக்கும் தருகிற தொண்டிலும், அங்காடிகளிலும் சதுக்கங்களிலும் அழகான விளம்பரத் தட்டிகள் அமைத்திடும் காரியத்திலும், அலுவலகத்திலே என்னென்ன காரணம் காட்டி விடுமுறை பெறுவது என்ற வித்தையிலும், இந்தச் செலவைக் குறைப்போமா, அந்தச் செலவை நீக்குவோமா, என்ன செய்தால் இருபதோ முப்பதோ மாநாட்டுச் செலவுக்காகக் கிடைக்கும் என்று சிக்கனம் பயில்வதிலும், ஈடுபட்டுள்ளவர்களின் தொகை கொஞ்சமா! இவர்கள் அனைவரும் யார்? தூற்றுவோரின் அகராதிப்படி

துரோகிகள்
மாபாவிகள்
அப்பாவிகள்

தூற்றல் நம்மைத் துளைத்துவிட்டது என்றா, பொருள்? நாம் காணும் இந்த எழுச்சியுடன் மகிழ்ச்சியும், தூற்றுவோர் குறித்துக் கவலை கொள்ளற்க, நாங்கள் அந்தத் தூற்றலை ஏற்றோமில்லை, பொருட்படுத்தினோமில்லை, அணிவகுத்து நிற்கிறோம், அறப்போரில் ஈடுபடத் தயாராக இருக்கிறோம், அழைப்பை ஏற்றுக்கொண்டு களம்புகத் தயாராகிவிட்டோம்; திட்டம் தயாராகட்டும், தியாகத்துக்குப் பஞ்சமில்லை, தீரருக்குக் குறைவில்லை, திருவிடம் தலைநிமிர்ந்து நிற்கிறது-என்று நாடு, நம்மை நோக்கிக் கூறுகிறது என்றல்லவா பொருள்?

நடந்தே வரப்போகிறோம்.

சைகிள் படை கிளம்புகிறது.

மாட்டு வண்டிகளில் வருகிறோம்.

தனி இரயிலுக்கு ஏற்பாடு செய்துகொண்டு வருகிறோம்.

என் அருமைத் தம்பி! தூற்றல் நமது வளர்ச்சியைக் கெடுத்துவிடுமோ குலைத்துவிடுமோ என்பதல்ல—நமக்குக் கிடைத்துள்ள இந்த வளர்ச்சியின் வேகத்தையும், அளவையும் தாங்கிக்கொண்டு, அதற்கு நம்மைத் தகுதியாக்கிக்கொண்டு, அதை நல்ல முறையில் பயன்படுத்தி குறிக்கோள் வெற்றிபெறச் செய்ய வேண்டுமே அதற்கான அறிவுடைமை நமக்கு ஏற்பட வேண்டுமே, அதற்குத் தகுந்த கூட்டு எண்ணம், கூட்டு முயற்சி, நம்மிடம் குன்றாமல் குறையாமல் நின்று நிலவ வேண்டுமே, என்பது தான்.

ஐந்து ஆறாயிரம் தோழர்கள் நம்மில் சிறை சென்றிருக்கிறோம்.

144 தடைகளைத் தூளாக்கி இருக்கிறோம்—போலீஸ் தடியடி நம்மில் நூற்றுக்கணக்கானவர்களைப் 'பதம்' பார்த்துவிட்டது!

துப்பாக்கியும் துளைத்து விட்டிருக்கிறது.

இவைகளைத் தாங்கிக்கொள்ளும், 'சக்தி' நமக்குக் கிடைத்திருப்பது மட்டுமல்ல நாம் கவனிக்க வேண்டியது, இப்படிப்பட்ட 'அடக்குமுறை' மூலம் நம்மை அடக்கித்தீர வேண்டும் என்ற நிலைக்கு ஆட்சியாளர் வந்து தீரவேண்டி இருக்கிறதே, அதுதான் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

பதவிப் பிரியர்கள் பல்லிளித்துக் கிடக்க, பணக்காரக் கூட்டம் பாத சேவை செய்ய, பத்திரிகை முதலாளிகள் பராக்குப் பாட, பவனி வருகிறது, பாரதமாதாவின் ஆசி பெற்ற ஒரு கூட்டம், இதனை, பஞ்சையும் பராரியும் பகல் பட்டினியும் பக்கிரியும் எதிர்க்கிறது, அதிகார வெறியரால் அலட்சியப் படுத்த முடியவில்லை, அடக்குமுறை வீசித்தான் இந்த எதிர்ப்பை ஒழிக்க முடியும் என்ற எண்ணம் பிறக்கிறது.

தோள் வலியும் வாள் வலியும் கொண்ட அரசுகளே, புரட்சிப் புயலில் சிக்கியகாலை பொடிப் பொடியான செய்தியைச் சுவைபடக் கூறுகிறது, வரலாறு. சூதுச் சூலில் தோன்றி வஞ்சனைத் தொட்டிலில் ஆடி, சூழ்ச்சிப் பள்ளி பயின்று, கெடுமதியைத் தோழனாகக்கொண்டு, கொடுங்கோலைக் குருவாக்கிக்கொண்ட ஒரு கொற்றவன் சீறி எழும் மக்களின் அறப்போரை எதிர்த்து நிற்கவா முடியும்! அங்ஙனம் எண்ணுவது பேதைமை! ஆயினென்! பெரும்பாலும் கொடுங்கோலர், பேதைமையைத் தான் பெருந்துணையாகக்கொள்கின்றனர், எனவேதான் வீழ்ந்து படுகின்றனர் எனினும் வரலாறு அறியா மக்கள் இங்கு ஏராளம் என்ற எண்ணத்தால் ஓர் அசட்டுத்தனமான துணிவு பெற்று, இன எழுச்சியை, விடுதலைக் கிளர்ச்சியை எதிர்த்தொழித்திடக் கிளம்புகின்றனர், சொந்த நாட்டைக் காட்டிக்கொடுக்கும் சுகபோகிகள்.

திருச்சி மாநில மாநாடு - அரிமா நோக்கு-என்றார் நம் நாவலர்.

காட்டரசனும் சிங்கம் நடந்து செல்வதிலே காணப்படும் கெம்பீரத்தை மட்டுமல்ல, அதன் பார்வையிலே காணக்கிடக்கும் வீரம் மட்டுமல்ல, அவர் குறிப்பிடுவது, சென்றுகொண்டிருக்கும் காட்டரசன் ஓரிடத்திலே நின்று, தான் நடந்துவந்த வழியினை ஒரு முறை பார்த்துவிட்டு, மேலால் நடக்குமாம். அதுபோலத் தம்பி, நாம் மாநில மாநாட்டிலேகூடி, இதுவரை நாமாற்றியுள்ள பணியினைப் பற்றி எண்ணிப் பார்த்து, எழுச்சிபெற்று, மேற்கொண்டு நமது பணியினைத் தொடங்கப்போகிறோம். நாம் கடந்து வந்த இடம், சாதாரணமானதல்ல, இன்னல்கள் பலவற்றினைச் சந்தித்து வெற்றி கண்டிருக்கிறோம், இதயம் எதையும் தாங்கும் வலிவு பெற்றுவிட்டது.

அல்ஜீரியா தூனீசியாமொராக்கோ சைப்ரஸ்-எங்கும் விடுதலைக் கிளர்ச்சி முழக்கம் கேட்கிறது.

அங்கெல்லாம், இரத்த வெள்ளத்திலே நீந்துகின்றனர், விடுதலை வீரர்கள்.

தாயகத்தை மீட்பேன்! - என்று சூளுரைத்திடும் வாலிபன் சுட்டுத் தள்ளப்படுகிறான். குண்டுமாரி பொழிந்து, கொடியோர் விடுதலைக் கிளர்ச்சிகளை ஒடுக்கிடத் துணிகின்றனர்! கொடுமைதான் - எனினும் மாற்றான் முன் மண்டியிடுவதைக் காட்டிலும், அவன் வீசும் குண்டுக்குப் பலியாகி வீழ்வதே மேல் என்று வீரர்களால் துணிவுபெற முடிகிறது. இங்கு நடைபெறுவதோ, அத்தகைய கொடுமை அல்ல; கேவலமானதோர் போக்கினை, மாற்றார் அல்ல, உற்றார், உடன் பிறந்தோர் கொண்டு, விடுதலைக் கிளர்ச்சியை இழித்துரைத்திடவும், மாற்றானுடன் கூடிக்கொண்டு சொந்த நாட்டவனைக் காட்டிக் கொடுக்கவும், முன் வந்துள்ளனர்.

வடநாட்டு ஆட்சியிலிருந்து விடுபடவேண்டும், திராவிடம் தனிஅரசு ஆகவேண்டும் என்று நாம் பரணி பாடும்போது, வடநாட்டார் வரிந்து

கட்டிக்கொண்டு நம்மை எதிர்த்திடக் கிளம்பினுல், நாம் திகைத்திடமாட்டோம்—திராவிடர்களிலேயே சிலர்—தம்மைத் திராவிடர் என்று கூறிக்கொள்ள மறுக்கும் சிலரன்ரே, சீறி எழுகின்றனர், சதிபுரிகின்றனர். விடுதலைக் கிளர்ச்சியை ஒழித்திடத் துடிக்கின்றனர். இந்த வேதனை தரும் கொடுமை, வேறு எங்கும் இல்லை! அல்ஜீரியாவுக்கு இப்போது ஏன் விடுதலை? பிரன்ச்சு ஆட்சியிலேயே இருக்கட்டும் என்று பேசிட அந்நாட்டிலே பக்தவத்சலங்கள் இல்லை!! இங்கு. அத்தகையோர், ஆளவந்தார்களாகி உள்ளனர்.

ஐஸ்லந்து
காஸ்ட்டா ரிகா
ஜோர்தான்
லக்சம்பர்க்
லிபியா
நைகார்குவா
பனமா

இவைகள் யாவும் ஐக்கிய நாடுகள் சபையிலே,உறுப்பினர்களாகி உயர்வு பெற்றுள்ளன. எமது சிங்கப்பூர் இந்த நாடுகளைவிட அளவிலே பெரிது.

நியூஜிலாந்து, ஐக்கிய நாடுகள் சபையிலே உறுப்பினரான போது, அந்த நாட்டிலே இருந்ததைக் காட்டிலும் அதிகமான குடிவளம் சிங்கப்பூரில் இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையிலே உறுப்பினராக உள்ள சுதந்திர நாடுகள் 16 சிங்கப்பூரின் வருவாயைவிடக் குறைந்த அளவு கொண்டன.

எனவே சிங்கப்பூர் தனி அரசு நடாத்த சகல உரிமையும் வசதியும் கொண்டதேயாகும்.

எனவே, சிங்கப்பூர் இனியும் பிரிட்டிஷ் காலனியாக இருக்கும் இழி நிலை இருத்தல் கூடாது—சுதந்திர நாடாகவேண்டும்.

சிங்கப்பூர், மலேயா போன்றே, பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இடம் பெற்று வாழ விரும்புகிறது — ஆனல் சுதந்திர நாடு ஆக வேண்டும்.

டேவிட் மார்ஷல் இதுபோல, சிங்கப்பூர் சுதந்திரநாடு ஆகவேண்டும் என்று இப்போது இலண்டனில் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

சிங்கப்பூரின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக, பிரிட்டனுடன் பேசி முடிவு காண்பதற்காக 13 உறுப்பினர்கள் கொண்ட ஒரு தூதுக்குழு சென்றிருக்கிறது, டேவிட் மார்ஷல் தலைமையில்.

இந்தத் தூதுக் குழுவில் எல்லா அரசியல் கட்சிகளும் இடம்பெற்றுள்ளன—சிங்கப்பூர் முதலமைச்சராக உள்ள டேவிட்மார்ஷல் தலைமை வகிக்கிருர்.

பேச்சு வெற்றி அளிக்கும் என்று நம்பப்படுகிறது; மலேயாவின் சுதந்திரத்துக்காக, இதுபோல, பிரிட்டனில் உள்ள ஆட்சியாளர்களிடம் பேசி வெற்றி கண்டார், துங்குரகிமான்; அதுபோன்றே டேவிட்மார்ஷலின் முயற்சியும் வெற்றி பெறும் என்று நம்பப்படுகிறது.

சுதந்திரம் கேட்கிறது சிங்கப்பூர்!

தன்னைவிட அளவிலே — எந்தெந்த நாடுகள் சிறியவை — அவைகளெல்லாம் சுதந்திரநாடுகளாகத் திகழ்ந்து, ஐக்ய நாடுகள் சபையிலேயும் இடம் பெற்று, ஏற்றம் பெற்று வாழ்வதை ஆதாரமாகக் காட்டி, சுதந்திரம் கேட்கிறது.

துணிவுடனும் உரிமையுடனும், கட்சிப் பாகுபாடுகளை மறந்தும், நாட்டுப்பற்றுகொண்டு விடுதலை உணர்ச்சிகொண்டு சுதந்திரத்துக்காக முழக்கமிடும் சிங்கப்பூரின் ஜனத்தொகை 12,00,000!

'திராவிட நாடு என்ற நமது இலட்சிய நாட்டிலே, தமிழர்கள் மட்டும் இரண்டு கோடி!!

பன்னிரண்டு இலட்சம் மக்கள் கொண்ட சிங்கப்பூர் சுதந்திரநாடு ஆகவேண்டுமென்று கேட்கிறது, —திராவிடநாடு என்பது, துண்டு போடும் திட்டம்—சிறு நாடு ஆகிச் சீரழியும் திட்டம் என்று இங்கு பேசுவதற்குக் கட்சிகள் உள்ளன!

பன்னிரண்டு இலட்சம் மக்களே கொண்ட நாடாயிற்றே, இதற்கோ சுதந்திரம் என்று ஐயம்கொள்ள வேண்டாம், இதனினும் குறைந்த ஜனத்தொகைகொண்ட ஜோர்தானும், லிபியாவும் லக்சம்பர்க்கும் பிறவும் சுதந்திரநாடுகளாக உள்ளன, அறிந்துகொள்மின் என்று டேவிட்மார்ஷல் எடுத்துரைக்கிருர், மாற்றுக்கட்சிகள் எல்லாமும் மற்றப் பிரச்சினைகளிலேதான் மாறுபாடான கொள்கை எமக்கு உண்டு, நாடு சுதந்திரம் பெறும் பிரச்சினையில், எமக்குள் கருத்து வேற்றுமையேகிடையாது. சிங்கப்பூர் சுதந்திரநாடு ஆகவேண்டும் என்பதிலே எல்லா அரசியல் கட்சிகளும் ஒருமனப்பட்டு உள்ளன என்று கூறுகின்றன. இங்கு திராவிடநாடு திராவிடருக்கு என்ருல், திராவிடநாடாவது சுடுகாடாவது என்று பேச, கட்சிகள் உள்ளன.

சிங்கப்பூருக்கென்று ஒரு வரலாறு - பண்பாடு - மொழி-மார்க்கம்-ஏதேனும் தனியான சிறப்பு அளிப்பதாக இருக்கிறதா என்ருல்-இல்லை!

திராவிடமோ, பிற பல நாடுகள் வடிவமும் வண்ணமும், வாழ்வும் வளமும் பெருதநாட்களிலேயே, தனிச்சிறப்புடன் திகழ்ந்ததற்கு வரலாறு காணக்கிடக்கிறது-எனினும் இங்கு, தமிழ்நாடு என்ற பெயர் எப்போது இருந்தது என்று தமிழில்கேட்டிட ஓர் தமிழர் இருக்கிருர்!!

தொல்காப்பியம், அகம் புறம், சிலம்பு மணி-எவையும் சிங்கப்பூருக்குக்கிடையாது. அங்கு இளங்கோவோ, காக்கைப்பாடினியாரோ, கபிலரோ வள்ளுவரோ, கம்பரோ காளமேகமோ, இருந்ததில்லை—எனினும் அந்த சிங்கப்பூர் சுதந்திர நாடாகவிரும்புகிறது, இங்கோ வடவருக்கு அடிபணிந்து, நமது நாவலர் அடிக்கடி எடுத்துக்கூறுவதுபோல, "சோற்ருலடித்த பிண்டங்களாக" இருந்திடச் சம்மதம் அளித்து, அதையே 'தேசியம்' என்று தெகிடுதத்தம் பேசிட ஓர் கூட்டம் இருக்கிறது-அக்கூட்டம் கோலோச்சும் நிலையையும் கைப்பற்றிவிட்டிருக்கிறது.

தம்பி! இந்தக்கூட்டத்தின் கொட்டத்தை அடக்கித் தீர வேண்டும், கோலோச்சும் நிலையினின்றும் இக்கெடுமதியாளர்கள் விரட்டப்பட்டாகவேண்டும், விடுதலைக்கிளர்ச்சி வெற்றிபெற வேண்டும், அதற்காக இந்தக்காட்டிக்கொடுக்கும் கயவர்கூட்டத்தினைக் கருவறுத்திடவேண்டும். அதற்கான திட்டமெல்லாம் தீட்டி தம்பி! நண்பர் குழாத்துடன், திருச்சி வந்து திரு இடத்துமணி விளக்கென ஒளிதந்து, மாநாட்டினை மகத்தான வெற்றிகரமாக்கு.

மாநாடாமே......இதுகளுக்கு.... என்று இன்றும் ஏளனம் பேசுவோர் உளர்! அவர்கள், கண்டு திகைத்திடத்தக்கதோர் பிரம்மாண்டமானதோர் அணிவகுப்பு கூடியாகவேண்டும், திருச்சியில்.

அன்பன்,

அண்ணத்துரை.

ஊர்வலம்

['ஞானக்கண்' பேட்டி]

வெயிலின் கொடுமை தாங்க முடியவில்லை! பேட்டிக்காக வெளியில் கிளம்பவும் இயலவில்லை!! இதைச் சொன்னால், கேட்பாரா ஆசிரியர்? எரிச்சலை அதிக மூட்டுவதுபோல இருந்தது தினசரி இதழ் ஒன்றில் நான் கண்ட செய்தியொன்று. நிதி—நீதி—படிப்பு, இம்மூன்றுக்கும் அமைச்சராக்கப்பட்டிருக்கிறாரே சுப்பிரமணியம் அவர் பேசினாராம், மதுரையில்! எங்கு போனாலும் இப்போது அவர், அது பற்றித்தான் பேசுகிறார். பாதந் தாங்கிகளாம், நாம்! பிரிட்டிஷாருக்குப் பாதந்தாங்கிகளாம்!! அதைப் படித்துக்கொண்டிருக்கும் போதே சென்னை சேப்பாக்கத்தில் தோழமைக் கழகச் சார்பில் ஒரு கூட்டம் நடப்பதாகவும், அதில் பி. டி. இராசன் கலந்து கொள்வதாகவும் 'நம் நாடு' இதழில் செய்தியொன்று இருந்தது. அங்கு, போகலாம்—சென்னைக் கடற்கரைக் காற்றையும் அனுபவித்துவிட்டு அவர் பேச்சையும் கேட்டு வரலாம் என்று கிளம்பினேன்.

அடடா! என்ன கூட்டம் என்கிறீர்கள்? என். வி. நடராசன் தலைமை வகித்தார். இரா. நெடுஞ்செழியன் பேசினார். பி.டி. இராசன் அவர்களும் பேசினார். அப்பப்ப! இந்தத் தள்ளாத வயதிலும், அவர் பேசிய வீர உரையைக் கேட்டபோது, அவரை ஒப்பற்ற பண்பாளர் என்று அழைப்பது மிகப் பொருத்தம் என்றே உணர்ந்தேன். சட்டசபையில் அவரைப் பார்த்து "பிரிட்டிஷாரின் பின்னோடிகளாக இருந்த உங்களை, வேறு நாடுகளாயிருந்தால் சுட்டுக் கொன்றிருப்பார்கள்; நாங்களாக இருப்பதால் விட்டுவிட்டோம்" என்றாரல்லவா சுப்பிரமணியம். அதுபற்றித்தான் பேசினார், "சுப்பிரமணியம் மிகச் சிறு பிள்ளை, அது பேசுவதைப் பேசட்டும் என்பதற்காகத்தான் சட்டசபையில் சும்மாயிருந்தேன். அதற்குப் பதில் சொல்வது அவசியமா என்ன! அங்கு பேசுவதை விட, உண்மையை உங்களிடம் சொல்லுவதுதான் எனக்கு அவசியம்" எனும கருத்தில் பேசினார். அவர் பேச்சை 'நம் நாடு' இதழில் நீங்கள் படித்திருக்கலாம். அந்த உரையைக் கேட்டுவிட்டு, கடற்கரைக்குப் போக 'பஸ்' ஏறச் சென்றேன்.

சென்னை நகரில் பஸ் ஏறச் சென்றால் படும் கஷ்டம்தான் தெரியுமே எல்லோருக்கும்! நானும் அனுபவித்தேன். அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவர், பஸ் போக்குவரத்து மந்திரியான பரமேஸ்வரனைப்பற்றி விளாசு விளாசென்று விளாசிக்கொண்டிருந்தார். காதுகூசிற்று, எனக்கு! காங்கிரசில் சேராதவர்களைத் துரோகி — சுட்டிருப்போம் என்றெல்லாம் சுப்பிரமணியம் பேசித்திரிகிறாரல்லவா? இந்தப் பரமேஸ்வரன் யார் தெரியுமா? பி. டி. இராசன் போர்ப் பிரச்சாரத் தலைவராக நமது மாகாணத்துக்கு இருந்தபோது, அவருக்குக் கீழ் ஒருபிரச்சாரகராக இருந்தவராம்! சுப்பிரமணியம் கூற்றுப்படி வெள்ளையருக்காகப் பாடுபட்டவர் அவர்! ஆனால், அவர் மேயராக முடிகிறது-மந்திரியாக இருக்க முடிகிறது-காமராஜரும் கனம்களும் கட்டிப் பிடித்துக் குலவுகிறார்கள் அவரிடம். காங்கிரஸ் கட்சி தலைவர்களில் ஒருவர் என்று பேசுகிறார்கள்! அப்படிப் பட்டவரை அருகில் வைத்துக்கொண்டிருக்கும் சுப்பிரமணியம்தான் இப்படியெல்லாம் பேசுகிறது!

* * *

கடற்கரை மணலில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னை நோக்கி ஒரு வெள்ளைக்கார உருவம் வருவதுபோல் இருந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன். நேரே என்னிடம் வந்து நின்றது.

"யார்?"

"என்னைத் தெரியவில்லையா!"

"எனக்குத் தெரியாது நீர் யாரென்று......"

"ஹ்யூம் என்று நீ கேள்விப்பட்டதில்லையா?"

தூக்கிவாரிப்போட்டது எனக்கு! ஹ்யூம் துரையைப் பற்றி, உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்க வேண்டுமே! எந்த வெள்ளைக்காரனுடைய பாதந்தாங்கிகள் என்று நம்மை சுப்பிரமணியம் ஏசுகிறாரோ அந்த வெள்ளைக்காரத் துரைதான், காங்கிரஸ் கட்சியையே ஆரம்பித்தவர். 'அடடா! நீங்களா?' என்று நான் வரவேற்பதற்குள் அந்த உருவம் மறைந்து, அதே இடத்தில் இன்னொரு உருவம் காட்சி அளித்தது. இதுவும் ஒரு வெள்ளைக்கார உருவம் தான்! இது யார்? — என்று திகைத்தேன். அந்த உருவம் 'ஜனகணமன' என்கிற இந்தியாவின் தேசீய கீதத்தைப் பாடிற்று. எனக்கு, மேலும் ஆச்சரியமாயிருந்தது.

"நீங்கள்......?" என்றேன்.

"நான்தானப்பா. இந்தியாவின் தேசீய கீதம் இருக்கிறதே, ஜனகணமன அதற்கு மெட்டு அமைத்தவன்......"

"என்ன! இந்திய தேசீய கீதம் எப்படிப் பாடவேண்டும் என்று அமைத்துத் தந்தது, வெள்ளைக்காரனான நீரா?"

"ஆமாம்!"

"உமது பெயர்...?"

"ஹெர்பர்ட் ஜான் முரில்!"

"என்னால் நம்பமுடியவில்லையே நீங்கள் சொல்வதை!" என்றேன். உடனே அந்த உருவம், 'இந்து பத்திரிகையின் பழைய ஏடு ஒன்றை எடுத்து நீட்டியது; பார்த்தேன்! 1952 செப்டம்பர் 4ந்தேதிய இந்து இதழின் 6ம் பக்கத்தில், உருவம் கூறிய செய்தியே இருந்தது. "வா, வா! உன்னைக்கொண்டு போய் சுப்பிரமணியத்திடம் நிறுத்தி, என்ன சொல்லுகிறாய்? யார் வெள்ளையனுடைய பாதந் தாங்கி என்று கேட்கிறேன்" என்று இழுக்கத் தாவினேன். உருவம் இல்லை. ஆனால், அது விட்டுப்போன 'இந்து' ஏடுமட்டும் என்னிடம் இருக்கிறது.

★

மந்திரவாதியும் புரோகிதனும்

கட்டுப்படுத்த முடியாத இயற்கையின் விளையாட்டுகளும், பஞ்ச பூதங்களின் வேலைகளும் ஆதி மனிதனை ஆச்சரியப்படுத்தவும் பயப்படுத்தவும் செய்துவந்துள்ளன. அன்று இயற்கை அமைப்புகள் அவனுக்கு எதிராக இருந்தன. இருப்பினும் தனது வாழ்வு முறையின் அடிப்படையில் இயற்கையை கட்டி ஆள நினைத்தான். இயற்கை கட்டி ஆளப்படும் போது மழை, இடி, வெளிச்சம் முதலியவைகள் ஏதோ துஷ்ட தெய்வங்களின் வேலைகளால்தான் ஏற்படுகின்றன என எண்ணலானான். தனக்கு துன்பம் தரும் இயற்கைச் சக்திகளை கெட்ட தெய்வங்கள்என எண்ணினான், இப்படிப்பட்ட கெட்ட தெய்வங்களின் அழிவிலிருந்து பாதுகாப்பு அடைய வெறும் பௌதீக சக்தியால் மட்டும் ஆகாது என அபிப்பிராயப்பட்டான். இதனால் இதே மாதிரியான தெய்வங்களை திருப்திப்படுத்தினால் நல்லது என எண்ணினான். யானை குழிகளிலே பிடிக்கப்படுகிறது. கரடி கண்ணாடியால் பிடிக்கப்படுகிறதாம், அதுபோல தெய்வங்களும் மந்திரம், பலி இதேபோன்ற சடங்குகளால் திருப்திப்படும் என நம்பினான். இந்த மூட நம்பிக்கையின் காரணமாகத்தான் மந்திரவாதி உண்டானான்.

விவசாயம் செய்ய ஆரம்பித்ததோடு மனிதனுக்குச் சில புதிய அவசியங்கள் உண்டாகின. மக்கள் பெருக்கம் விரிய ஆரம்பிக்க ஆரம்பிக்க அவனுக்கு உற்பத்திப் பொருள்கள் அதிகமாகத் தேவைப்பட்டன. அதிகத் தேவைகளுக்கு விளைவுகள் நன்றாக இருக்க வேண்டி ஏற்பட்டது. அந்தவிளைவுகளும் வெள்ளப் பெருக்கம் மழையின்மை, நோய் போன்றவைகளிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும், இந்தவிதமான அவசியங்களில் இருந்துதான் புரோகிதன் தோன்றினான்.

மந்திரவாதியைப்போலவே புரோகிதனும் சமுதாயத்தில் முக்கியத்துவம் பெற ஆரம்பித்தான். சூரியன், சந்திரன் முதலான கோளங்களின் போக்கை நன்கு அறிந்திருந்ததினால் புரோகிதன் ஆதரிக்கப்பட்டான். கால நிலை

மூலம்:
மலையாளம் கெ. தாமோதரன்
வழி:
'எழிலி'

கூறி நுழைந்த புரோகிதன் கடவுளை நேரில் கூப்பிட்டால் என்னுடன் பேசுவார் என்றான், எனது ஆணைக்குட்பட்டு இந்திரன் மழையைப் பெய்யவைப்பான் என்றான். என்னிடம்தான் இருக்கிறது, யுத்தத்தில் தோல்வியும் வெற்றியும் தேடித் தருவது என்றான். பாவம்! பக்குவமடையா மக்கள் அவனது வாக்கை நம்பினர். இப்படியாகத்தான் நமது நாட்டில் பார்ப்பனரின் ஆதிக்கம் வளர ஆரம்பித்தது. மதத்தின் பேரால், மகேஸ்வரன்பேரால் அவர்கள் வளர ஆரம்பித்தனர்.

தெய்வங்களைத் திருப்திப்படுத்தவும், மனிதனுக்கு நன்மை தருவதற்காக கடவுளை வேண்டும் சில மந்திரங்களைக் கூறிக்கொண்டும்தான் பிராமணர்கள் சரித்திரத்தில் காலெடுத்துவைத்தனர். தெய்வங்களைத் திருப்திப்படுத்த எங்களால்தான் முடியும் என்று கூறி மக்களை ஏமாற்றியதில்தான் அவர்கள் போற்றப்பட்டனர். வியாதிகளிலிருந்தும் கஷ்டங்களிலிருந்தும் விடுதலை கிடைக்க பிராமணர்களின் தலைமையில் யாகங்கள் நடத்தப்பட்டன. யாகங்கள் வழியாக மக்களிடமிருந்து ஏராளமான சொத்துக்களைத் தட்டிப் பறிக்க முடிந்தது!! ஜனங்களின் அறியாமையும் மூடநம்பிக்கையும்தான் அவர்களின் மூலதனமாக இருந்தது. காலம் மாறியது. சமுதாயம் பல வர்க்கங்களாகப் பிரிய ஆரமபித்தது. சமுதாயம் பல வர்க்கங்களாகப் பிரிந்த பிறகு அவர்கள் பணக்காரர்களின் தொகுதியில் இருந்துகொண்டு அவர்களது அதிகார உரிமைகளை உறுதிப்படுத்தினர். மதம் ஏழை மக்களைச் சுரண்டவும், அவர்களது பொங்கி வரும் சக்தியைத் தடுத்து நிறுத்தவும் பயன்பட்டது. மிகவும் மட்டரகமான இழிமைச் செயல்கள் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்டன. சொத்துக்கள் தெய்வ அனுக்கிரகத்தால்தான் உண்டாகின்றன. சிலர் செல்வந்தர்களாகவும், சிலர் ஏழைகளாகவும் பிறப்பது அது அவர்களது பூர்வஜெனம பலாபலனும், தலையெழுத்தும் காரணம் எனப்பட்டது. மதத்தின் உதவியால் இதேபோன்ற கட்டுக்கதைகளைப் பரப்பி அவர்களது சுகபோக வாழ்விற்கு அஸ்திவாரம் அமைத்தனர்.

தங்களது வாழ்நாள் முழுவதும் பட்டினி கிடந்து பாடுபடும் மக்களிடம், இந்த உலகிலே பொறுமையோடு கிடைப்பதை வைத்துக்கொண்டு திருப்தியுடன் வாழ மதம் உபதேசிக்கிறது. சொர்க்கத்திலே இதற்கு பிரதிபலன் கிடைக்கும் என்ற ஆசையை ஊட்டி அவர்களை சமாதானப்படுத்துகிறது. அநேக மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் அந்தச் சிலரிடம் 'தானசில'ராகுங்கள் என்று வேண்டிக்கொள்கிறது. இப்படியே மதம் சுரண்டலுக்கு ஒரு நியாயத்தைக் கற்பிப்பதோடு பணக்காரர்கள் வெகு இலகுவில் சுவர்க்கத்தை அடைவதற்கு ஒரு 'டிக்கட்'டையும் கொடுக்கிறது.

மதங்களின் உற்பத்தி எல்லாம் சமுதாய அவசியங்களிலிருந்து உண்டாயின என்றிருக்கலாம். அதுமட்டுமல்ல, சிலசமயங்களில்

சுரண்டல் அனுபவிப்பவர்களின் போராட்டங்களும் மத உருவில் உண்டாகிப் புறப்பட்டதாக இருக்கலாம். உதாரணமாக, கிருஸ்துவ மதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஜருஸலேமிலும் ரோமிலும் மற்றும் பல இடங்களிலும், அடிமைத் தனத்தை ஏற்றுக் கஷ்டப்பட்டுக் கொண்டுவந்த மக்களின் குரலாக **ஏழைகளின் வேதனையைப் பிரதிபலிக்கும் குரலாகத்தான் இயேசுகிருஸ்து உயர்ந்து வந்தார்.** செல்வர்களுடன் கடுமையான வெறுப்பு—ஏழைகளிடையே மனம் குளிர்ந்த அன்பு — இவைகளாக இருந்தன கிருஸ்துவ மதத்தின் உள் அடக்கம். ஆனால் சில நூற்றுண்டுகளின் பிறகு கிருஸ்துவமதத்தை அவர்களுக்கு அனுகூலமான விதத்தில், ஏழைகளைக் கஷ்டப்படுத்தப் பயன்படும் ஒரு சாதனமாக உபயோகப்படுத்தும் அளவில் பயன்படுத்த செல்வந்தர்களால் முடிந்தது என்பது சரித்திரம் கூறும் உண்மை.

பாடுபடும் பாட்டாளி, இரத்தத்தை வேர்வையாகமாற்றிப் பாடுபடும் அடிமை, இன்பம் என்பது என்ன என்று அறியாத மக்கள்—இவர்களின் புரட்சிப்போர் என்ற நிலைமைக்குததான் கிருஸ்துவ மதம் ஆரம்பமாகியது. பாடுபடும் மக்களின், உழைப்போரின் துன்பப்படுவோரின் குரலாக ஆதி கிருஸ்துவ மதம் இருந்தமையால் அந்தக் கொள்கையைப் பின்பற்றிய ஆதிகிருஸ்துவர்களை, சுகபோகிகள், சுரண்டி வாழ்பவர்கள், பணம் மிகுந்தோர் எல்லோரும் கொடுமைப்படுத்தினர். காலம் மாறியது. மூன்று நூற்றுண்டுகள் கடந்துவிட்டன. பிறகுதான் கிருஸ்துவ மதம் அரசியல் மதமாக அங்கீகரிக்கப்பட்டது. அப்போது அதிலே அன்றைய நிலையிலிருந்த சமுதாய உற்பத்திமுறைக்குத் தகுந்தவிதத்தில் கிருஸ்துவ மதத்தில் மீண்டும் சில மாற்றங்கள் உண்டாயின. மாதா கோவிலும் பாதிரியும் மக்களிடையே முக்கியத்துவம் பெறத் தொடங்கினர். “ஒரு ஊசியின் காது வழியாக ஒட்டகம் நுழைவது எவ்வளவு கஷ்டமானதோ அதுபோல மிகவும் கடினமான காரியம் செல்வர்கள் சுவர்க்கத்தை அடைவது” என்று கூறிய ஏசு கிருஸ்துவின் பின்வந்தவர்கள்தான், ஐரோப்பாவிலேயே மிகவும் பெரிய பிரபுக்களாக மாறினர்.

மாதா கோவிலின் தலைவர்களிலே மிகவும் உயர்ந்த பதவியிலிருந்தவர் போப். அவருக்குக் கீழே சிறிய நிலச்சுவான்தார்களைப் போல பிஷப்புகள், அவர்களுக்கும் கீழே சாதாரண பாதிரிகள். பாதிரிகளின் நிலைமைதான் மிகவும் மோசம்' இருப்பினும், அவர்கள் மூலமாகத்தான் விவசாயிகள் சுரண்டப்பட்டனர்.

வாளுக்கும் சிலுவைக்கும் அடிக்கடி சில தகராறுகளும் உரிமைப் போர்களும் நிகழ்ந்திருக்கின்றன. இருப்பினும் மெஜாரிட்டி மக்களாகிய ஏழைகளை மிதித்து சுரண்டும் காரியத்தில் அவைகள் இரண்டும் உற்ற துணைவர்களாக இருந்துள்ளன. மாதா கோவில்கள்தான் உண்மையில் நிலப்பிரபுத்துவ முறைக்கு கேந்திரஸ்தானம். நிலப் பிரபுத்துவ முறையின் ஆசைகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் தாங்கள்தான் தலைவர்கள் என்ற நிலைமையில்தான் மாதா கோயில் தலைவர்கள் அவர்களது அதிகாரத்தை உறுதிப்படுத்தினர்.

வழிபாடுகள் மூலமாகவும் காணிக்கை மூலமாகவும் கோயில்களின் சொந்த சொத்துகள் வளர்ந்துகொண்டே வந்தன. நிலப்பிரபுத்துவம் வளர ஆரம்பித்தபொழுது விளைச்சல் பூமிகளில் பெரும்பாகம் கோவில்களின் ஆதிக்கத்தில் இருந்தன.

நிலப்பிரபுத்துவம் வளர்ந்ததோடுகூட கோயில்களின் முக்கியத்துவமும் வளர ஆரம்பித்தது, சுகபோகத்திலே புரள்பவர்களும், தங்களது சொத்துக்கள் எவ்வளவு வளர்ந்தாலும் திருப்தியடையாதவருமான கோயில் மேதாவிகள் இவ்விருவரும் கிருஸ்துவர்களாகிய சாதாரண மக்களின் வெறுப்புக்கு மட்டுமல்லாமல் தரித்திரர்களான புரோகிதர்களின் எதிர்ப்பிற்கும் பாத்திரமாக ஆயினர். சமுகத்திலே வளர்ந்துவரும் வர்க்கப் போராட்டங்கள் கோயில்களின் செயல்களிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. புரோகிதர்கள் Dominicans என்றும் Franciscans என்றும் இரு பிரிவாகப் பிரித்தனர். இந்தக் கட்டத்தில், ஒரு பிரிவினர் சொத்துரிமைக்காக வாதாடினர். மற்றவர்கள் சொத்துரிமையும் சுகபோகமும் கிருஸ்துவின் உபதேசங்களுக்கு எதிரானவை என்று செயின்ட் பிரான்சிஸ் வேதபுத்தகத்திலிருந்து அநேக எடுத்துக்காட்டுகள் எடுத்துக்கூறி



காஷ்மீரை விடமாட்டோம் என்று கர்ச்சித்துக்கொண்டிருந்த நேரு பண்டிதர், இப்போது இரு துண்டாக்கி பாகிஸ்தானும் இந்தியாவும் பங்கு போட்டுக்கொள்ளலாம் என்று பேசுகிருரல்லவா? கோடிட்டிருக்கும்பாகத்தைப் பாகிஸ்தானும, வெள்ளையாக இருக்கும் பாகத்தை இந்தியாவும் எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான் அந்த யோசனை!

உண்மையான கிருத்துவர்கள் சுக போகங்களில் வாழக்கூடாது என்றும் எப்பொழுதும் கஷ்டப்பட்டு ஏழ்மையிலேயே வாழவேண்டுமென்றும் கூறினர். அவர் கூறிய வார்த்தைகள் சாதாரண மக்களாகிய ஏழைமக்களை ஈர்த்தது.

வைக்கிலிப்பின் உபதேசங்கள் அநேக ஆயிரம் ஏழை விவசாயிகளின் போராட்டங்களின் எதிரொலியாக இருந்தது. கோவில் வசை நிலங்களை பலாத்காரமாகப் பறித்து விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்றுகூட வைக்கிலிப் பிரஸ்தாபித்தார். தெய்வசம்பந்தமான அதிகாரங்களும் சக்திகளும்போப் பிற்குமாத்திரம் உரிமையான சொத்தல்ல, அவை எல்லோருக்கும் உரியது என்றும் அவர் கூறினர்.

சென்னையில்

புத்தர் விழா

மே 24, 25, 26

நாட்களில்

அறநெறி, அன்புநெறி, தழைத்திட

அனைவரும் விழாவின் வெற்றிக்குப்

பணி புரிக.

வைகிலிப்பின் சிஷ்யனுன ஜோன் பால் என்ற பாதிரி "எனது நல்லவர்களாகிய மக்களே! எல்லாவிதமான சொத்துக்களும் பொதுஜன சொத்துக்களாக ஆகின்ற வரை ஆண்டான் அடிமை என்ற வித்தியாசம் இல்லாது போகின்றவரை இங்கிலாந்தில் எந்த விதமான காரியங்களும் நேராகமாட்டாது. ஒருபொழுதும் சரியாக மாட்டாது. நாம் பிரபுக்கள்; பெரியவர்கள் என்று அவர்களைப் பார்த்து கூப்பிடுகிறோமே அவர்களுக்கு என்ன நம்மைக்காட்டிலும் உயர்வானவைகள் (குணத்தில் அறிவில்) இருக்கின்றன. நம்மை ஏன் அவர்கள் அடிமைகளாகவைத்திருக்கின்றனர். நாம் எல்லாம் ஒரே தாய் தந்தையின் — ஆதாம்— ஏவாள்—குழந்தைகள் என்றால் அவர்களுக்கு எப்படி நம்மைக்காட்டிலும் உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு நம்மை அடக்கி ஆளும் எஜமானர்களாக இருக்கமுடியும்? எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்பதை இதை வைத்துக்கொண்டு தெளிவாக்குவார்களா? நம்மை அவர்கள் பாடுபடும்படி கட்டாயப் படுத்துகின்றனர். அவர்களின் சுகபோக வாழ்விற்காக நாம் பல பொருள்களை உற்பத்தி செய்கிறோம். நாம் பாடுபடாதிருந்தால் அவர்களுக்கு சுகவாழ்வேது, ஆடம்பரமேது. அவர்கள் வெல்வெட்டு துணிகளும், உரோமங்களும் பட்டு நூல்களும் கொண்டும் உண்டாக்கின அழகான அருமையான கோட்டுகள் அணிகின்றனர். ஆனால் நாமோ கரடு முரடான பருத்தி துணிகள் அணிகிறோம். அவர்களுக்கு சுகவாழ்வு ஸ்தலங்கள் இருக்கின்றன. வாசனைத் திரவியங்கள், உல்லாசமாக வாழ உபரிக்கைகள். மதுரசம் அருகே மங்கை. தெவிட்டா உணவு தித்திக்கும் பழங்கள், தேன் என இனிக்கும் பால் முதலியன இருக்கின்றன. ஆனல் நமக்கோ காய்ந்த ரொட்டியும் மற்றவர்களின் எச்சிலைகளும், வெறும் தண்ணீரும் தான் கிடைக்கின்றன. அழகான பங்களாக்கள் அவர்களுக்கு! ஆகாயமே கூரையாக பூமியே தளமாக இருக்கும் ஓலைக் குடிசைகள் நமக்கு. நாம் வயல்களிலே, பகல் இரவென்று பாராது காற்றிலும் மழையிலும் கஷ்டப்படுகிறோம். நமது கஷ்டங்களின் மேல்தான் அவர்களது சுகபோக மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவர்கள் நம்மை அடிமைகள் என்று கூப்பிடுகின்றனர். அவர்களது உத்தரவுகளுக்குப் பணியாவிடில் நம்மைக் கொடுமைப் படுத்துகின்றனர்" என்று முழக்கமிட்டார்.

இதற்கு போப்பின் எதிர்ப்பு கிளம்பிற்று. பலரும் சகிக்கமுடியாத துன்பம் ஏற்றனர். சிலர் உயிரோடு சுட்டு எரிக்கப்பட்டனர்; சிலர் தூக்கிலிடப்பட்டனர்; சிலர் சித்திரவதை செய்யப்பட்டனர் இருப்பினும் அந்தப் புரட்சிப்போர், மக்களின் குரல், மதோன்மத்தர்களாகிய மதவாதிகளுக்கு எதிராகக் கிளம்பிய அந்தச் சக்தியை, ஆவேசக் காட்டாறை அவர்களால் தடுத்துநிறுத்தவோ அழித்து விடவோ முடியவில்லை. அது வளர்பிறைபோல வளர்ந்து கொண்டே வந்தது.

அழிவை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்த நிலப்பிரபுத்துவம், கோவில் ஏகாதிபத்தியம் இவைகள் உண்டாக்கிய சமுதாய அமைப்பிலிருந்து, முதலாளித்துவ முறையிலிருந்து மாறி புது மாதிரியான ஒரு சக்தி உருவாகிக் கொண்டு வந்தது. இந்தவிதமான புதிய சக்திகள் வளர வளர நிலப்பிரபுத்துவத்தின் கேந்திரமாகிய கோவில் மேதாவிகள் அதிகமாகவே குற்றம் சுமத்தப்பட்டனர்; மக்களால் கண்டிக்கப்பட்டனர்; மக்களால் தூற்றப்பட்டனர். முன்னேற்றக் கருத்துக்கொண்ட சில பாதிரிகள், சிந்தனைச் சிற்பிகள், பகுத்தறிவுச் சுடர்கள் புரட்சி வீரர்கள், இவர்கள் எடுத்துக் கூறிய உண்மை, இவர்கள் தெரிவித்த மதம்பற்றிய விளக்கம், அரசியல் அமைப்புகளை அரசியல் எல்லைகளைத் தாண்டி தீப்பொறி எனப் பற்றிக்கொண்டமைக்குக் காரணம், அன்றைய சமுதாயத்திலே மக்கள்நிலைபற்றி ஆராய்ந்தாலே போதும். ஜெர்மனியிலே ஒரு லூதர், பிரான்சில் ஒரு கால்வின்—இவர்களது தலைமையில் ஆரம்பித்த சீர்திருத்தம் சர்வசக்தியுள்ள புரட்சி சக்திக்கு அடித்தளம் போன்றதாகும். முதலாளித்துவ சக்தி அழிவை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டு இருக்கிறது என்பதைக் கூறத்தான் இந்தவிதமான சீர்திருத்தக் கிளர்ச்சிகள் செய்தனர்.

★

களத்தில் வென்றான்

நடனசபாபதி:- என்னப்பா வீராதி வீரா! ஒரே பரபரப்பு......

செங்குட்டுவன்:- ஓகோ! சபாபதியா... வேலை மலைபோல் இருக்கிறது... நாள் அதிகம் இல்லையே......

நடன:- என்ன வேலை அப்படி.....என்னமோ கலியாணத்துக்குத் தயாராகிற மாப்பிள்ளைபோல இருக்கிறாய்......

செங்கு:- கலியாணத்துக்குத் தயாராகும் மாப்பிள்ளை போல அல்லடா அப்பா, ஆடும் தெய்வமே! களத்துக்குத் தயாராகும் வீரன்போல என்று சொல்லு......மே 17, 18, 19, 20-ல் திருச்சியில் தி. மு. க. மாநில மாநாடு, தெரியாதா?

நடன:- அடடே, அதுதானா...

செங்கு:- அதென்னப்பா ஆடலழகா, அவ்வளவு அலட்சியமாகக் கூறிவிட்டாய்......

நடன:- மகாநாடுதானே......

செங்கு:- ஆமாம்........மாமாங்கம் அல்லடா மண்டுகமே, குளத்திலே விழுந்து புரளும் கூத்து அல்ல... தியாகத் தீயிலே குளிக்க தீரர்கள் கூடுகிறார்கள் இலட்சக் கணக்கில்; திராவிடனாகப் பிறந்தும், இனப்பற்றும், நாட்டுப் பற்றும் கொள்ளாமல், காவடித் திருவிழாவுக்கும் சேவடித் திருவிழாவுக்கும் சென்று கருத்தழியும் உன்போன்றவர்களுக்கும், அறிவுச் சுடர் கொளுத்த ஆற்றலாளர்கள் கூடுகிறார்கள் திருச்சியில்.

நடன:- சரியடா அப்பா செங்குட்டுவா! சீறாதே......அரசியல் மாநாடு தானே அது...நமக்கு என்ன வேலை அங்கே...?

செங்கு:- என்ன தெளிவு, என்ன தெளிவு! திருச்சியில் நடப்பது அரசியல் மாநாடு, மாணவர்களுக்கு அங்கு என்னவேலை என்று கேட்டுவிட்டாய் மகா மேதாவிபோல! திருப்பதிக்கும் தில்லைக்கும், காஞ்சிக்கும் சீரங்கத்துக்கும் சென்று, இடிப்பதும் அடிப்பதும் மெத்தத் தேவை அல்லவா!......என்ன அறிவுச் சூன்யமடா உனக்கு. வாழ்ந்த ஒரு இனம் வீழ்ந்து கிடக்கிறது. வளமான ஓர் நாடு, அடிமைக் காடாகி இருக்கிறது. வாழ்விழந்து, தன்மானமிழந்து, அரசு இழந்து நாம் அல்லற்படுகிறோம். அந்த அவதியைத் துடைத்திட, தாயகத்தை மீட்டிட, தருக்கர் ஆட்சியை ஒழித்திட அறப்போர் தொடுத்திட ஆண்மையாளர்கள் கூடுகிறார்கள் திருச்சியில், அங்கு நமக்கென்ன வேலை என்று பேசுகிறாயே! மலை மலையாகக் குவித்துவைத்திருக்கும், வரலாற்று ஏடு, உனக்கு இந்த அறிவுதானா தந்தது. வீரர் காதைகளை, விடுதலை வரலாறுகளை விழுந்து விழுந்து படிக்கிறாயே...உன் கண்முன்னால் நடைபெறும் வீரக் காதையில், விடுதலை வரலாற்றில் நாட்டம் காட்டாமலிருப்பதா அறிவுடைமை......

நடன:- போதுமடா அப்பா, போர் வீரனே! அரசியல் கிளர்ச்சியில் நமக்கென்ன வேலை என்று கேட்டேன்—அவ்வளவுதானே.

செங்:- இது வெறும் அரசியல் கிளர்ச்சி அல்ல—விடுதலை இயக்கம்—வீரர்க்கும் விவேகிக்கும் இதிலே பங்கு உண்டு — அறிவு இயக்கம்—தெளிவு தேடுவோர் அனைவருக்கும் இடம் உண்டு—சாக்ரடீஸ்காலமுதற்கொண்டு ஷா காலம் வரையிலே, உலகினை உயர்வித்தவர்களைப்பற்றிய கருத்தளிக்கும் காதைகளை, விஞ்ஞான வித்தகர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை, விடுதலைப்போர் நடாத்தி வெற்றி கண்ட வீரர் வரலாறுகளை எடுத்துக் கூறி, நம்க்கு ஏற்றமளிக்க, இன உணர்வு ஊட்ட, எழுச்சி தரும் சொற்பொழிவுகள், இன்னிசை, நாடகம், இவ்வளவும் உண்டு. சுவையும் பயனும் மிகுதியும் உண்டு.

நடன:- அடடே! சொல்லும்போதே எனக்கும் சுவையாகத்தான் இருக்கிறது......

செங்:. கேட்கும்போதே இனிக்கிறது என்றாய், சபாபதி, காட்சியைக் கண்டால் சொக்கிப்போவாய். கருத்துக்குப் புது விருந்து கிடைக்கும் சபாபதி! இது தாளச் சத்தமும் மேளச் சத்தமும் கேட்டு, சதங்கைச் சத்தத்துக்கு ஏங்கிக்கிடக்கும் 'சத்காரியமல்ல' தாயகத்தை மீட்டிட அமைக்கப்படும் தன்னிகரற்ற அணி வகுப்பு கூடும் பாசறை! புத்தறிவு வழங்கிடும் பல்கலைக் கழகம்.

நடன:- எல்லாவற்றையும் கேட்டால், இன்பமயமாகத்தான் இருக்கும்......

செங்:- அதுமட்டுமல்ல, செயலில் ஈடுபடத் தூண்டும் — வீரனுக்கும். அஞ்சா நெஞ்சும், நேர்மைத் திறனும் கிடைக்கும். பிறந்த பொன்னாட்டின் அடிமைத் தளைகளை உடைத்தெறியும் ஆற்றல் கிடைக்கும்...உனக்குக்கூட......

சபாபதி:- செங்குட்டுவா! என்னைப் போல, என்னைப்போல என்று கேலி செய்யாதே! நீயும் ஒரு காலத்தில், என்னைப்போலத்தான் இருந்திருப்பாய், அக்கரையற்று. உனக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது, எழுச்சியுடன் பேசுகிறாய். திருச்சி மாநாடு எனக்கு விழிப்புணச்சியும் எழுச்சியும் தரத்தானே போகிறது. பார்! நான் உன்னை மிஞ்சிவிடுகிறேன் விரைவில். எனக்கும், நமது மக்களின் இழி நிலையும், அடிமை நிலையும்புரியாமலில்லை. நமக்கென்ன, நாம் என்னசெய்ய முடியும் என்று இருந்துவிட்டேன். இனி அவ்விதம் இருந்திடமாட்டேன். நானும் திருச்சி மாநாடு வரத்தான் போகிறேன்......

செங்:- மகிழ்ச்சி! மகிழ்ச்சி! நண்பா! நான் ஆர்வமிகுதியால், உன்னை அலட்சியமாகப் பேசிவிட்டேன். மன்னித்துவிடு.........வா, நாம் இருவரும் சேர்ந்தே போவோம்.

சபா:- உன்னிடம் நான் வேடிக்கைக்கு வாதாடினேன்......நான் திருச்சிக்குப் புறப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன், தெரியுமா......

செங்:- அடடே, போக்கிரி ஒன்றும் தெரியாதவன்போல இதுவரை பேசிக்கொண்டு இருந்தாயே என் வயற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளத்தானா. சபாபதி.....

நடன:- உஸ்! நான் சபாபதியல்லடா, சபாபதி அல்ல......என் பெயர், களத்தில்வென்றான்; தெரிந்துகொள்.

★

இலங்கை தேர்தல்—ஒரு பாடம்

இலங்கையிற் பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது, எவரும் எதிர்பாராத முறையிற் சம்பவங்கள். நிகழ்ந்துவிட்டன. ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் உதைத்துத் தள்ளிவிட்டனர். இப்படியாகத் தமக்கு வீழ்ச்சி ஏற்படுமென்று அக்கட்சியினர் எண்ணியதேயில்லை. அல்லது அக் கட்சியை எதிர்த்துப் போராடினோராவது இப்படியான முறையில் தமக்கு வெற்றி கிடைக்குமெனக் கனவிலும் நினைத்திருக்கமாட்டாரே. தங்கட்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு யாவருமே திகைப்பும் வியப்பும் அடைகின்றனர்.

தேர்தலில் ஈடுபட்ட அபேட்சகர்கள் பொதுவாகச் சோதிடரிடம் தமது ஓலைகளைக் காட்டினராம்! அவர்கள்கூட இந்தப் பாடான இறக்கம் ஏற்படுமெனக் குறிப்பாகத்தானும் கூறுதுவிட்டனரே பாவம்! அபேட்சகர்கள் தனிப்பட்ட முறையிலன்று கட்சிகளுடன் சரிந்துவிழுந்து தவிடுபொடியாயினரே.

அதிகாரக் கட்சியின் அடாத செயல்களுக்கு முற்றுப்புள்ளி புதுமுறையிற் கிடைத்ததென்றே சொல்லவேண்டும். பொய்யும் புரட்டும் உருட்டும் மிருட்டும் மழுப்பும் எத்தனை நாட்களுக்கு? நாடுபடுகுழியில் சென்று விழுமுன்னர் எச்சரிக்கை கிடைத்ததென்றே கூறவேண்டும். இனி அதிகாரம் பெறும் கட்சிகட்கும் சர்வாதிகாரிகளாக நடந்துகொள்ளும் தலைவர்கட்கும் நல்ல எச்சரிக்கை. அக்கிரமத்துக்கு வீழ்ச்சி நாள் உண்டென்பதைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டிவிட்டன.

மொழிப் பிரச்னைதான் இவ்விதமான மாற்றத்தைக் கொண்டுவந்ததெனச் சிலர் கூறுகின்றனர். அப்படியானல் ஐ. தே. கட்சியினரும் மொழிப் பிரச்சினையை முன்னுக்குத் தள்ளிக் காட்டியே தேர்தலை நடத்திவந்தனர். எனவே, மொழிக்காக இந்தப் பெரிய சுவர் சரிந்து விழுந்ததுமல்ல; சிங்களர் தம் மதத்தைப் பழையபடி நிமிர்த்த இன்று முன்றுபட்டனரோவென்ருல் அதுவும் காணப்படவில்லை. அதிகாரக் கட்சியை விழுத்தும் முயற்சியிற் புத்தர்களும், கிறிஸ்துவர்களும், இந்துக்களும் நானே நீயோ என்று முன்னோடி முனைந்துநின்று வேலை செய்தனர். முஸ்லீம்கள்கூடச் சில இடங்களில் எதிர்த்துநின்று கருமமாற்றியுள்ளனர்.

இம்முறை பணம் எதுவும் செய்ய இயலாதிருந்தது இங்கு பெரிதுங் குறிப்பிடப்படவேண்டியது. ஏழை வாக்காளர் பணத்தை துரும்பாகவும் மதித்தாரில்லை அப்படித்தான் பணத்திற்காகச் சென்றோரும் தமது மனவுறுதியை அதற்காக மாற்றிக்கொள்ளவில்லை. பணத்தைக்கொண்டு இவ்வளவு காலமும் வெற்றிகண்டவர்கள் இம்முறை தூங்கிப்போயிருந்தனர். நம்பி மோசம் அடைந்தனர். வாக்கினை மக்கள் உணர்ச்சியுடன் இம்முறைபோல் உபயோகித்தது என்றுமில்லை எனலாம். அவர்கள் செய்த தீர்மானம் சரியா பிழையாவென்பதல்ல இங்கு ஆராய்ச்சி; எவரின் பலவந்தமுமின்றி, தாம் நன்றென உணர்ந்து, உணர்ச்சி வேகத்துடன் அளிக்கப்பட்டதே வாக்கு என்பதை நாம் உணரவேண்டும்.

ஆள்பிடிகாரர், நாட்டாண்மைக்காரர், ஊருடையார்மார், முதலாளிமார், என்பவர்கள் இம்முறை தங்கள் வேலைகள் தேவைப்படாததைக் கண்டு தவித்தனர்தான். இனி வருங்காலம் இதிலும்திருத்தமுடையதாகும். வாக்காளர்கட்கு தமது கொள்கையைப் பகிரங்கக் கூட்டங்களில் உரைப்பதன்றி வேறு வேலை வருங்காலத்தில் கிடையாதாய்விடும். கல்வியும் பத்திரிகைப் படிப்பும், கலந்துரையாடலும் கதித்துவரும் இக் காலத்தில் மக்கள் முகத்துக்காகப், பணத்துக்காக, பெற்ற முன் உதவிக்காக, பெறலாமெனக் கருதும் பின் உதவிக்காக வாக்களிப்பாரென்ற காலம் கப்பலேறிப் போகின்றது. இம் முறை நடந்த தேர்தலே யாவருக்கும் இவ்விஷயத்தைப் பற்றி முன் எச்சரிக்கை செய்துவிட்டது.

அசைக்கமுடியாத ஐக்கிய தேசியக் கட்சி அடியோடு விழுந்ததென்ருல் அதற்குக் காரணர் வாக்காளர்கள்; ஏழைக் குடியானவனுக்கு மொழிச் சிக்கல் மாத்திரம் உய்வைக் கொண்டுவர மாட்டாது அரிசி விலையை ஏற்றினர். நேரத்துக்கு ஒருணவுங் கிடையாத மாணவரின் மத்தியான அப்பத்துண்டினை நிற்பாட்டினர்; வாழ்க்கைப் பொருள்கள் விலை ஓடி உயர்ந்து சென்றது; குடிவகையும் அதனுடன் நடிப்பும் துள்ளித் துடித்தன; பொய் வேடங்கட்கு மதிப்பு ஏற்பட்டது; இந்த அக்கிரமங்கட்கு எல்லை வராவிடின் உலக நிலை யாதாய் முடியுமோ?

தென்னிலங்கையில் மலை சரிந்து விழுந்ததென்ருல் வட கீழ் மாகாணங்களிலும் அப்படியே பெருமாற்றங்கள் நிகழ்ந்தனவே. இங்கு மத்தியான உணவுமன்று; தமிழன் நிலையென்ன? தமிழ் மொழியின் கதி யாது? என்பன அவர்களின் சிந்தையை ஆட்டி அசைத்தன. தமிழ் மக்கள் தமது மொழி சாதி, கலாசாரம் என்பனவைகளை உயிரிலும் பெரிதாக மதித்தனர் என்பதைத் தேர்தல் நன்கு காட்டிவிட்டது. எத்தனை தேர்தல் பிரசங்கங்கள் நடந்தன. எத்தனை இடங்களில் நாட்டாண்மைக்காரர் விழுந்து முழக்கினர்? எவ்வித பயனுமில்லை. தமது மொழி, தமது சாதி, தமது கலாசாரம் என்பனவற்றைக் காக்கக்கூடிய கட்சி தமிழர் கட்சியென்பது மக்கள் மனதில் பதிந்துவிட்டது. அதை மாற்றச் செய்த எத்தனங்கள் யாவும் வீணுயின. சமஷ்டி அரசியல் ஏற்குமா? ஏற்காதா என்பதல்ல இன்றைய பிரச்சினை; தமிழனுக்கு இன்று உதவி புரிந்து பாதுகாக்கக்கூடிய கட்சி எது என்பதுதான் கேள்வி. தமிழ் மக்கள் கொண்ட எண்ணம் சரியா பிழையா என்பதை வாதித்துப் பயனில்லை. அவர்கள் ஏகோபித்துச் செய்த முடிவே முக்கியமானது. ஐ. தே. கட்சியுடன் தொடர்பு வைத்தவர்கள், தமிழரசுக் கட்சியை வேறு காரணங்கட்காக எதிர்த்தவர்கள் எல்லாரும் வீழ்ச்சியடைந்தனர். ஆகவே, இன்று தமிழர் சார்பில் நின்று போராடி அவர்கள் மொழியையும் சாதியையும் பாதுகாக்கும் பொறுப்பு சமஷ்டிக் கட்சியினர் பொறுப்பாகின்றது. எனவே, எதிர்காலம் மிக்க கஷ்டத்தோடு கூடியதொன்ருகும். வாக்காளரின் ஆதரவைப்பெற்றுப் பிரதிநிதிகள் சபையில் அங்கத்துவம் பெற்ற கட்சியினரதும் தனிப்பட்டவரதும் பொறுப்பும் கடமையும் சாமானியமன்று.

—ஈழகேசரி

★

"நான் தமிழன் அல்லவோ!"

"நான் தமிழன் அல்லவா? என்னைப் போய்த் திட்டுகிறார்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர்!" என்று, தஞ்சைத் தரணியில் ஏதோ ஓரிடத்தில், முதலமைச்சர், காமராஜர், உருக்கமாகக் கேட்டாராம். கேட்கும்போது, பச்சாதாபமாகக் கூட இருக்கிறது! **தமிழனல்லவா!** என்ன பணிவு இந்தக் கேள்வியில்? எத்துணை குழைவு இதிலே? முதலமைச்சர், மெத்த மனவருத்தமுற்றல்லவா இருக்கிறார்போல் தெரிகிறது, இந்த அவருடைய கேள்வியைப் பார்க்கும்போது!

ஆனால், இவரை, திராவிட முன்னேற்றக் கழகத்தார், என்ன திட்டினார்கள்? இவர்தம் ஆட்சியிலே நேரிட்டுள்ள கேடுகளை எடுத்துக் காட்டி, இவர்தம் போக்கைக் கண்டித்தனர்—கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளனர். மக்களாட்சியின் மாண்புக்குத் துளியும் பங்கம் ஏற்பட விடக்கூடாது என்பதனால், கைநீட்டிக் கொள்கையை மறந்திடும் கோணற் குணம் கொள்ள மறுத்துவிட்டனர்.

காமராஜர், முதலமைச்சரானார் என்ற செய்தி கரும்பெனத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் இனித்தது. தொண்டர் வரிசையிலிருந்து கிளம்பி, துரைத்தனத் தலைவர் ஆனாரே, என்பதுபற்றிப் பாராட்டி மகிழ்ந்து வரவேற்கத்தான் செய்தது. ஆச்சாரியாரின் அநியாயத் திட்டத்தை அகற்றியது கண்டு, வாழ்த்தத் தவறவில்லை. காண்ட்ராக்டும் கிராண்டும், சிபாரிசும், உத்யோகமும் தேடிடும் திருவாளர்கள் போக்கில், திராவிட முன்னேற்றக் கழகம் இருந்திருக்குமானால், காமராஜரை, கண்கண்ட தெய்வமென்று புகழ்ந்து பேசியும் எழுதியும், எமது கலிதீர்க்கவந்தவர் என்று முகமன் கூறியும், பல்லைக் காட்டி, பரிசு கேட்டிருக்கும்.

ஓர் நாட்டு விடுதலைக் கிளர்ச்சியினை நடாத்திடும் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிறது தி. மு. க.

தி. மு. கழகத்துக்கு அதற்கேற்ற ஆடம்பரம் இல்லாமலிருக்கலாம்! ஆனால் அழுக்கற்ற நெஞ்சம் கொண்டிருக்கிறது. எனவே இச்சகம் பேசிப் பிழைத்திடும் இழிநிலைக்குச் சென்றிட மறுக்கிறது.

காமராஜரிடம் காதலால் கசிந்து கண்ணீர் மல்கி,காரியம் சாதித்துக் கொண்டு, சுவையில் சொக்கிப் போயுள்ளவர்கள் போலிருக்க தி. மு. க. மறுக்கிறது.

அரசியலில் பிச்சைப் பாத்திரத்தைச் சின்னமாகவும், பிடித்திழுப் போனுக்கெல்லாம் பெண்டாவதை போக்காகவும்,இலாபத்தை நோக்கமாகவும், கொண்டதாக இருத்தல் கூடாது என்பது, தி. மு. க.வின் அசைக்க முடியாத நம்பிக்கை.

எனவேதான், காமராஜ் சர்க்காருக்கு 'கைத்தடி'யாகி, அந்நிலையே பெறற்கரிய பெரும்பேறு, என்று எண்ணிட மறுக்கிறது.

வெளிப்படையாக ஒன்று கூறிவிடுவது நல்லது.

காங்கிரசிடமும் காங்கிரசாட்சியிடமும் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்புணர்ச்சி காட்டிவருவது, காமராஜர் போன்ற ஒருவர், அந்தக் கட்சியையும் ஆட்சியையும் நடத்திச் செல்வதற்கு முன்வரவில்லையே என்ற ஏக்கம்கொண்டு அல்ல!

உண்மையை மறைத்துப் பயனில்லை, ஓமந்தூரார் ஆட்சியையோ குமாரசாமி இராஜாவின் ஆட்சியையோ, திராவிடர் இயக்கம் எதிர்த்ததற்குக் காரணம், ஓமந்தூராரும் குமாரசாமி ராஜாவும் நல்லவர்களல்ல, திறனற்றவர்கள் என்ற காரணத்தால் அல்ல அவ்விருவரும் தனிப்பட்டவர்கள் என்ற முறையில் நமது பெருமதிப்புக்குஉரியவர்களே —திறமை மிகுந்தவர்களே— உள்ளத் திண்மையுடையவர்கள் — நற்குணமும் திறனும் கொண்டவர்களெனினும், அவர்கள், திராவிடத்தை வடநாட்டவருக்கு அடிமைப்படுத்தும் காங்கிரஸ் கட்சியினர் என்பதனாலேயே அவர்தம் ஆட்சியினை எதிர்த்தோம்.

ஏதோ, நீண்டநாட்களாக, நாம், காமராஜரின் வருகைக்காகத் 'தவம்' கிடந்தவர்கள்போலவும், இடையிலே எவர் ஆட்சிசெய்ய வந்தாலும், மனதிலே இனிப்பு ஏற்படாது இடர்ப்பட்டுக் கிடந்தது போலவும், எமக்குக் காமராஜரை அளியுங்கள்! அவர் வந்தால் எமது அல்லல் தீரும்! அவர் ஆட்சியிலே எமது அபிலாஷைகள் நிறைவேறும்! என்று இறைஞ்சி நின்றதுபோலவும், நேரு பெருமகனார், நமது தவத்துக்கு இரங்கிக் காமராஜரை நமக்கு அருளியதுபோலவும், [illegible], பாவனை பேச, நாம் மறுக்கிறோம்.

அரசியலில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவதனையே பெரும் வலிவாகக் கொண்ட பெரியாரிடம் பயின்றோம், எனவே பசப்ப மறுக்கிறோம்—வெளிப்படையாகவே கூறிவிடுகிறோம், நாம், காமராஜரின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தது மில்லை, அவர் ஆட்சித் தலைவர் ஆவார் என்று எதிர்பார்த்தது மில்லை; அதுமட்டுமல்ல, அவருடைய துரைத்தனத்திலே, திராவிடரின் இலட்சியம் நிறைவேறும் என்று நாம் கனவுகூடக் காண மாட்டோம்.

இவ்வளவு இருந்தும், தனிப்பட்ட முறையில் அவரிடம் நமக்கு மரியாதைக் குறைவான எண்ணம் துளியும் கிடையாது—கொடி தூக்கிய தொண்டர் கோட்டையில் கோலோச்சுகிறார் என்பது கண்டு மக்களாட்சியின் மாண்புகளிலே இது ஒன்று என்ற வகையிலே மகிழத்தான் செய்தோம் — வாழ்த்தி வரவேற்கத் தயங்கவுமில்லை.

ஆனால்அவர் தமிழரின்உரிமையை உடைமையைப் பிறரிடம்கோட்டைவிடக் கண்டபிறகும், தமிழ் இன உணர்வுகொள்ள மறுக்கிறது கண்ட பிறகும், அவரைப் பச்சைத் தமிழர் என்றும், இச்சைக்கு உகந்தவர் என்றும், கொச்சைமொழியாலேயே கொற்றத்துக்கு ஓர் ஏற்றம் அளிக்கும் குணாளர் என்றும் கூறிட மறுக்கிறோம். உள்ளம் இடம் தரவில்லை!!

நான் தமிழனில்லையா? என்று கேட்கிறாராம் காமராஜர் — நாமும் அதையேதானே கேட்கிறோம்.

வேறு வேறு தலைவர்களாவது—நேரு உட்பட—மேனாட்டு முறைகளிலே மூழ்கிக் கிடந்தவர்கள்— காமராஜர் அங்ஙனமல்லவே! 'தமிழ்த்தன்மை'யை, கல்லூரிப் படிப்பால் கெடுத்துக்கொண்டவரல்ல; மேனாட்டுத் தொடர்பினால் தமிழ் மெருகு குலையவில்லை. தமிழ்நாடுதான் முழுக்கமுழுக்கஅவருக்கு உயிரூட்டம் அளித்தது. எனினும் அவர் தமிழரின் உரிமையைக் காத்திட என்ன செய்தார்? எல்லை பறிபோகவிட்டார்! கேட்டால், குளமும் மேடுமா முக்கியம் என்று கேட்கிறார்!! தமிழ்நாடு என்ற பெயர் கூட அல்லவா அவருக்குக் கசப்பாகிவிட்டது; எத்தனை ஆண்டுகளாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்துவந்தார்; ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் சென்று பயின்றவர்களெல்லாம்கூட, நம் நாடு தமிழ்நாடு என்று கூறுகிறார்கள், தமிழ்நாடன்றி வேறு நாடு அறியாத, இவருக்குத் தமிழ்நாடு என்றால் பிடிக்கவில்லையே! என்ன காரணம்? தமிழரல்லவா? என்று நாம் கேட்கவேண்டி அல்லவா நேரிடுகிறது.

நானும் தமிழன்தானே! என்று கேட்கிறார் காமராஜர்.

நிச்சயமாகத் தமிழர்தான்! ஆனால், தமிழரின் உரிமையைப் பறிப்போரிடம் கூடிக்கொண்டு, தமிழ்நாட்டைக் காட்டிக்கொடுக்கும் தமிழர்!!

தமிழ்நாடு என்ற பெயர் இடுவதற்கு, யார் எதிர்ப்பு காட்டுகிறார்கள்? ஆந்திரரோ, மலையாளிகளோ, கருநாடகத்தாரோ, எதிர்ப்புரைத்தனரா?

டில்லி, குறுக்கிட்டுத் தடுத்ததோ?

இல்லை! இல்லை! எனின் ஏன், 'தமிழ்நாடு' என்ற பெயரிடக்கூட இந்தத் தமிழருக்குச் சம்மதமில்லை? தமிழ்நாட்டைத் தமிழ்நாடு என்று பெயரிட்டு அழைக்க விரும்பாத தமிழர் இவர், என்றால், இவரை, எந்த வகையான தமிழர் என்று கொள்வது, சொல்வது?

திராவிட முன்னேற்றக் கழகம், இதைத்தான் கேட்கிறது — ஏச வில்லை, இழிசொல் ஏதும் வீசவில்லை.

பத்தாண்டு பாரிஸ் வாசம், ஏழாண்டு இங்கிலாந்து வாசம், ஆறாண்டுஅமெரிக்கவாசம், தமிழர் என்ற இன உணர்வைக்கெடுத்து விட்டது என்றாவது காரணம் இருக்குமானால், நாம் பரிதாபப்படலாம். இவர் நிலை அதுவா?

மறைத்துப் பயனில்லை, உண்மை வெடித்துக்கொண்டு வெளிவரத்தான் போகிறது, விரைவில்; காமராஜர், தமிழ்நாடு என்ற பெயர் வேண்டாம், கூடாது, சென்னை ராஜ்யம் என்றுதான் பெயர் இருக்கவேண்டும் என்று பிடிவாதம் காட்டுவது — பெரியாரின் அன்பான வேண்டுகோளையும் மதித்திட மறுப்பது—சாதாரணச் சம்பவமல்ல; அதற்குப்பின்னே, ஒரு சதி உருவாகிக்கொண்டு வருகிறது.

சென்னை ராஜ்யம் என்று நாட்டுக்குப் பொதுப் பெயர் இருக்க வேண்டுமேயன்றி தமிழ்நாடு என்று பெயர் இருப்பது, கூடாது; ஏன் எனில், தெலுங்கரும் மலையாளியும், கருநாடகத்தாரும், இது நமக்கெல்லாம் உரிய நாடல்ல — இது தமிழருக்கு மட்டுமே உரியது —என்று எண்ணி மனக்கசப்பு கொள்ளக் கூடாது, என்பதற்காகவே காமராஜர், தமிழ்நாடு என்ற பெயரை மறுத்திருக்கிறார்.

தமிழர் மட்டும்தானே தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்—மற்றவர்களுக்குத்தான் அவரவர் மொழி வழிஅரசு கிடைத்துவிட்டதேஎன்றாலோஇப்போதைக்குக்கிடைத்து விட்டது—ஆனால், இதை ஒழித்து விட்டு ஆச்சாரியாரின் தட்சிணப் பிரதேசத் திட்டம் ஏற்பட இருக்கிறது! அதற்கு வழி செய்து வைக்கவே, இப்போதே, தமிழ்நாடு என்ற பெயரை காமராஜர் நீக்கி விட்டார்!

அதோ, கனம். சுப்ரமணியம், தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்து இடைவிடாத பிரசாரம் செய்து வருகிறார்.

இதோ, காமராஜர் அவரைக் கட்டுப்படுத்தாமல், கண் சிமிட்டிக் காலங்கழிக்கிறார்.

அடுத்ததேர்தல் வரையில், காமராஜர், தட்சிணப் பிரதேசம்பற்றி வாய் திறவாமலிருந்துவிட்டு, பிறகு, தட்சிணப் பிரதேசம் அமைத்திடச் சம்மதம் அளிக்கப் போகிறார் — அதற்கு 'ஜாடை, காட்டுவதுபோலத்தான், இப்போது தமிழ்நாடு என்ற பெயர் கூடாது என்று தர்பார் செய்கிறார்.

தயவாகக் கேட்கிறார்கள்—பிடிவாதமாகப் பேசுகிறார்.

அன்பு பொழிந்து கேட்கிறார்கள் —அலட்சியமாக இருக்கிறார்.

பெரியார் கேட்கிருர் — வேறு பேச்சுப் பேசுங்கள் என்கிருர்.

தட்சிணப் பிரதேசத்தைப் புகுத்தவே, இப்போது தமிழ்நாடு என்ற பெயர் மறுக்கப்படுகிறது—என்று நாம் அஞ்சுகிருேம்.

நாடு, இதனை இன்றே அறிந்து கொள்வது நல்லது என்பதற்காகவே, இவர் எத்தகைய தமிழர் என்பதை மக்கள் அறியச்செய்து வருகிருேமே தவிர, இவரை யாரும் இழித்தும் பழித்தும் பேசவில்லை!

இறுதி நேரத்திலகூட இவர் துருப்புச் சீட்டை அடிக்காமலிருக்கக் கூடாது.

தமிழர்களுக்கு விரோதமான முடிவு டில்லியிலிருந்து வந்ததுமே தம் முதலமைச்சர் பதவியை உதைத்துத் தள்ளிவிட்டு சுதந்திர வீரராக வெளியேறுவார் என்று எதிர்பார்க்கிருேம்.

இவர் ராஜிநாமா செய்தால்தான் தமிழ்நாடு மக்களிடையே சிறிதாவது விழிப்புணர்ச்சி ஏற்படும். திமிர்பிடித்த நேரு ஆட்சிக்கும் சிறிதாவது அதிர்ச்சி ஏற்படும்.

இப்படிச்சொன்னவர், பெரியார்.

தேவிகுளமும் இல்லை, பீர்மேடும் கிடையாது; தமிழர்கள் ஒன்றுபட்டுக் கேட்டாலும் இல்லை, கிளர்ச்சி நடத்தினுலும் இல்லை, சட்டசபை தீர்மானம் நிறைவேற்றினுலும் இல்லை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியும் பயனில்லை என்று டில்லி தீர்ப்பளித்துவிட்டதே, என்னசெய்தார் காமராஜர்?

குளமாவது மேடாவது!! என்று குத்தல் பேசுகிருர்!

இந்தத் தமிழர், எந்தவகையான தமிழர்? என்றுதான் நாம் கேட்கிருேம்.

'பச்சைத் தமிழர்' என்று பாராட்டுகிருர் பெரியார், 'சுதந்திர வீரர்' ஆவார் என்று சீராட்டிப் பேசுகிருர் பெரியார், இவரோ, நான் தமிழனுக இருக்கலாம், பெரியாரின் தயவு பெற்று வாழ்ந்து வரலாம், இருந்தாலும் நான் முதலில் வடநாட்டு ஆட்சிக்குக் கங்காணி, அந்தக் 'கடமை'தான் எனக்கு முதலாவது, முடிவானது!! என்று கூறுகிருர்—செயலால்!!

அதனுல்தான், இவர் தமிழர் தானே!—என்று தி. மு. க. கேட்கிறது!!

★

பண்டிதரின் மனம் பாகாய் உருகிவிட்டதாம்—பழங்குடி மக்கள்—ஏழை எளியவர்கள் படும் அவதி கண்டு.

கண்ணீர் சொரிந்தாராம், அவர்கள் புழுப்போல் துடித்துக் கிடப்பது கண்டு.

நண்டு நுழையும் வளைபோல் வீடு! உழைப்பு, மாடுபோல! அவர்களை எஜமானன் நடத்துவதோ நாய்போல! அவர்களுக்கு சத்புருஷர்கள் உபதேசிப்பதோ, சாந்தம் பற்றி! தேசியத் தலைவர்கள் கூறிடும் புத்திமதியோ பொறுமை, பொறுமை! அமைதி! அமைதி!—என்பதாகும்.

நேபாள மன்னரையும் போபால் நவாபையும், ராஜபுதன ஜாகீர்தார்களையும் பம்பாய் சேட்டுமார்களையும், கண்டுகளித்திடும் கண்களால், பண்டித நேரு பஞ்சை பனுதைகள் வதைபடும் பாழிடத்தைக் கண்டார்! கண்களிலே நீரும் சுரந்ததாம், நெருப்பும் கிளம்பிற்ரும்!

என் ஆட்சியிலா இதைக் காண்கிறேன்? என் பரிபாலனத்திலா இப்படிப்பட்ட பரிதாப நிலையில் மக்கள் வாட்டி வதைக்கப்படுகிருர்கள்—என்று பதறிக் கேட்டிருக்கிருர் பண்டிதர்.

ஊரெல்லாம், மகர தோரணங்களும், வரவேற்பு வளைவுகளும் அமைத்து, வாழ்த்தொலி முழங்கிட, வண்ணம் விளங்கிடும் வகையில் ஆடை அணி புனைந்தோர் ஆரத்தி எடுக்க, கனதனவான்கள் கட்டியங் கூற, கவர்னர் பெருமகனுர் கைலாகு கொடுக்க, அலங்கார மேடைமீது ஏறி, இலட்சக் கணக்கிலே திரண்டு நிற்கும் மக்களை நோக்கி, பாரததேசத்து மக்களே! பஞ்சசீலக் கொள்கையை ஆதரியுங்கள். ஐந்தாண்டுத் திட்டம் உங்கட்கு ஆனந்தமளிக்கும். எங்கும் அணைகள், தேக்கங்கள்—தொழிற்சாலைகள்—ஆராய்ச்சிக் கூடங்கள் அமைத்துவிட்டிருக்கிறேன்—செல்வம் கொழித்திட வழி செய்து வைத்திருக்கிறேன்—இனி உங்கள் வறுமை, பழங்கதையாகிவிடும், வாட்டம் துடைக்கப்பட்டுவிடும்—வந்தேமாதரம்—ஜெய்ஹிந்த் என்று முழக்கமிட்டுக் கொண்டுவரும், பண்டிதரின் கண்களை உறுத்தி, கருத்தை உலுக்கிவிட்டுவிட்டது, டில்லியில் ஏழைகள் வதியும் சேரியை அவர் காண நேரிட்டபோது. மலக்குழி என்று சொல்லத்தக்க இடத்திலே தள்ளப்பட்டிருக்கிருர்கள் அந்த மனிதஜென்மங்கள்! எனினும் அவர் தம் மனம் எவ்வளவு தங்கமானது! தங்களுக்கு இந்த நிலையைத் தந்திருக்கும் ஆட்சியின் தலைவருக்கு மலர் தூவி வரவேற்ருர்கள்!

எமக்கு, பண்டிதரே! உம்மால் வாழ்வளிக்க முடியவில்லை. இதோ, நாங்கள் நரகலூரில் தள்ளிவைக்கப்பட்டிருக்கிருேம். உலகமே புகழ்கிறதாம், வியப்படைகிறதாம், உமது ஆற்றலைக்கேட்டு. சீனு சென்றீராம், சிறப்பான வரவேற்பாம்! ரஷியா சென்றீராம் ராஜோபசாரம் நடைபெற்றதாம். அமெரிக்காவில் அமோகமான வரவேற்பாம்! பண்டிதரே! பார்புகழ வாழ்கிறீர், உமது பரிபாலனத்திலே தான் நாங்களும் இருக்கிருேம்—இழிவும் இம்சையும் கொட்டுகிறது, மனிதப் பிறவிகள் என்ற பெயர் தான் இருக்கிறது, மிருகத்தைவிடக் கேவலமான வாழ்க்கையில் கிடந்து வதைபடுகிருேம். எமது

நாட்டுத் தலைவருக்கு உலகெல்லாம் 'கியாதி' என்று கூறிடக்கேட்கும்போது, எங்கே எங்கள் நிலையைக் கண்டு விடுகிறார்களோ அந்த வெளி நாட்டார் என்று எங்களுக்கெல்லாம் கிலி தான்! ஆனால் அவர்கள் ஏன் எங்களைப் பார்க்க போகிறார்கள்! உங்கள் ஆட்சியிலேதான் ஒரு நேர்த்தியான முறை இருக்கிறதாமே, வெளி நாட்டுத் தலைவர்கள் வந்ததும், விமான நிலையத்தில் வரவேற்பு, ராஜகட்ட தரிசனம், ராஷ்டிரபதி பவனத்தில் விருந்து செங்கோட்டையில் விழா, பிறகு தாஜ் மஹால் காட்சி, இப்படி 'ரசம்' கூட்டித்தரப்படுகிறதே இந்த ஏழைகள் இழி நிலையில் இருக்கும் கோரத்தை அவர்கள் ஏன் காணப் போகிறார்கள்? பண்டிதரே! நீரே, பார்ப்பது கிடையாதே!! அத்தி பூத்தது போலல்லவா வந்துவிட்டீர். எம்மை மனிதர் என்று மதித்திட, எமக்கு வாழ்வில் இன்பமோ மணமோ அளித்திட, நீர் திறனற்றுக் கிடப்பினும், எமது உள்ளத்தில் மனிததத்தன்மை இருக்கிறது. இதோ மலர்தூவி உம்மை வரவேற்கிறோம்—வாரீர்—காணீர்—என்று அந்த ஏழை மக்கள் கூறுவதுபோலிருக்கிறது வரவேற்பு. பண்டிதருக்கு வாட்டம் மேலிட்டு விட்டது! இந்த அநாசாரமான இடங்களை, சேரிகளை, இடித்துத் தள்ளி, கொளுத்திச் சாம்பலாக்கி விட வேண்டும் என்று கூறியிருக்கிறார்—உணர்ச்சி வயப்பட்டு, அடிக்கடி, பண்டிதர், இதுபோல் உணர்ச்சி வயப்படுகிறார்.

"பெண்ணின் பெருமை அறியாத பேயனே! தாய்க்கும் தாரத்துக்கும் வித்தியாசம் தெரியாத மிருகமே!கற்பே மாதர்க்கு அணிகலன், ஒழுக்கமே சமுதாயத்துக்கு அச்சு என்பதை மதியாமல், அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்டவன்போல, நம்பிவந்த இந்த நங்கையை நள்ளிரவில், அவள் பதறினாளாம், கதறினாளாம், காலடி வீழ்ந்தாளாம், கடவுளைத் துணைக்கு அழைத்தாளாம், காதகனே! கடுகளவும் இரக்கம் காட்டாமல், இந்த மங்கை நல்லாளை, மாசிலாமணியை, அவள் துடிக்கத் துடிக்கக் கட்டித் தழுவி, அவளை உன் மிருக வெறிக்கு இரையாக்கினாயாமே! பெரும் பழி தேடிக் கொண்டாய். பெண்குலத்துக்குப் பெருந்துரோகம் செய்துவிட்டாய். பண்பு கெடுத்தாய்! சண்டாளா! உன்போன்ற சழக்கர்கள், உலவுவது, இந்தப் புண்ய பூமிக்கே அடுக்காது. உனனை, இந்நாட்டவன் என்று சொல்லிக்கொள்வதே இழிவு, கேவலம், பாதகம். போ! போ! ஒழிந்துபோ! அழிந்துபோ! அந்த அபலையின் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் வந்ததுபோல, உன் இதயத்திலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு வரட்டும். அவளுடைய கற்பை அழித்தாயல்லவா காதகா! உன் மனம் கல்லா, இரும்பா, என்று பார்க்கப் போகிறது, இந்தக் கூர்மையான கத்தி! பதறி என்னடா பயன், பாதகா! கதறினால் விட்டு விடுவேனா, காதகனே! அந்தக் காரிகை உன் காலைத் தொட்டுக் கும்பிட்டு அப்பா! என்றாளாம், அண்ணா என்றாளாம், ஆண்டவனே! என்று அலறினாளாம், ஒரே ஒருமுத்தம்—உன்னைப் பெருவிட்டால் உயிர்தரியாது என்றல்லவா பேசினாயாம்-புயலில் சிக்கிய பூங்கொடிபோல அவள் துவண்டிட மூர்க்கனே! அவளைப் பிடித்திழுத்துச் சென்று, அக்ரமம் நடத்தி ஆவியினும் மேலான அவள் கற்பை அழித்தாயே. அக்ரமக்காரா ஒழிந்துபோ! உன்னை விட்டு வைப்பது மகாபாபம், மகாபாபம்! ஒழிந்துபோ! கதறு! புரண்டு அழு! புரண்டு புரண்டு அழு! பாபாத்மாக்களுக்கு, மகாத்மா அவதரித்த இந்த நாட்டிலே இடம் கிடையாது என்பதை, மனித மிருகமே! உலகு அறியட்டும்! உத்தமர்களும் வித்தகர்களும் வாழ்ந்திடும் இந்தத் தேசத்திலே உன் போன்ற உலுத்தர்களுக்கு இடம் இல்லை, என்பதை உலகு அறியட்டும்! பரிதாபத்துக்குரிய பாவை என்ன செய்வாள்? நாம், பலசாலி! என்றல்லவா எண்ணிக்கொண்டு உன் காமப் பசிக்கு அவளைப் பலி கொண்டாய்? இதோபார்! பழிதீர்க்கும் படலம்! பாவிகள் வதைபடும் படலம்! பஞ்சமா பாதகம் செய்தோன் படுநாசமாக்கப்படும் படலம்! பழிக்குப்பழி! பழிக்குப்பழி!!"

கொட்டகை அதிருகிறது—குபுகுபுவென இரத்தம் பொங்குகிறது—திரை விழுகிறது—மீண்டும் மகிழ்ச்சி ஆரவாரம் கொட்டகையில்.

குத்திய குணாளனும், குத்தப்பட்ட குடிகேடனும், கற்பழிக்கப் பட்டவளைக் கண்டுபேசி, ஒருவர் நடிப்பை மற்றவர் பாராட்டிக் கொள்கிறார்கள்; குத்தகை எடுத்தோர் குதூகலமாகக் கணக்குப் பார்க்கிறார், கட்டணம் கொடுத்துக் காட்சியைக் கண்டோர், நாடகத்தின் அருமையைப் பாராட்டிக் கொண்டு வீடு செல்கிறார்கள்!

நாடகக் கொட்டகையில் கற்பழிப்போன், குத்திக் கொல்லப் படுவதுபோலவே, ஓரோர் சமயம், பண்டித நேரு, சமூகத்தில் காணப் கிடக்கும் கொடுமையை, மடைமையை வன்மையாகக் கண்டிக்கிறார், ஒழித்துக்கட்டுவேன் என்று சூள் உரைக்கிறார்—ஆனால் திரை விழுந்ததும், நடிகர்கள் தத்தம் அலுவலைக் கவனிக்கச் செல்வது போல, உணர்ச்சி வயப்பட்ட பண்டிதருக்கு, உணர்ச்சியை வெளிப்படுத்தும் வாய்ப்பு முடிந்தானதும், வழக்கமான பவனியில் ஈடுபட்டு விடுகிறார்-பஞ்சை பஞ்சையாகவே இருக்கிறான் — பராரி தேம்பித் தவிக்கிறான் — சேரி எப்போதும் போல நாற்றமடித்தவண்ணமே இருக்கிறது — செந்தேனென வறுமை கொட்டுகிறது — மதுக் குடங்கள் எமது கண்கள், வில் எமது புருவம், மலர் எமது கன்னம், கொடி எமது இடை, கோல மயில் எமது சாயல், கூவும் குயில் எமது குரல், கோடீஸ்வரன் எமது உரிமையாளர்—என்று கூறுவது போலக் கோமளவல்லிகள், தோட்டக் கச்சேரிகளை நடத்திக் காட்டுகிறார்கள்—நேருபண்டிதர், நேர்த்தியான விருந்து உண்டு, தமது நொந்த உள்ளத்துக்கு நிம்மதி தேடிக்கொள்கிறார் — நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்ட மக்களோ, வானத்தை அண்ணாந்து பார்ப்பதும், வரவில்லையே சாவு என்று ஏங்குவதுமாக, துன்பப்பட்டபடி இருக்கிறார்கள். தூர தேசங்களிலேயோ, நேருவின் ஆட்சியிலே, மக்கள் சுபீட்சமாக இருக்கிறார்கள் என்று சம்பளம் பெற்றுவரும் தூதுவர்கள் சேதிகளைத் தந்துகொண்டுள்ளனர். அதுமட்டுமா? பண்டிதருக்கு, ஏழை மக்கள் படுகிற அவதியைக் கண்டால், கண்களில் நீர்கொப்பளிக்கும், கனல் கக்குவார், அவ்வளவு இரக்க மனம் படைத்தவர் எமது ஏழை பங்காளர் என்று எடுத்தியம்புவர்! ஏழை அழுத கண்ணீரே கூட, நேருவுக்கு புகழ் தரும் அபிஷேக நீராக்கப்பட்டு விடுகிறது.

ஏப்ரல் திங்கள், முதல் நாள் நேருபண்டிதர், புதுடில்லியில் உள்ள 'சேரிகளைப்' பார்வையிடச்

சென்றார்; இங்கு மூன்று இலட்சம் மக்கள் குடி இருக்கிறார்கள்; முட்டுச் சந்துகள்; முடை நாற்றம்வீசும் இடங்கள்; சாக்கடைக் குழியில் குடிசைகள்! இங்கு மனித இனம், மிருக நிலையில்!!

ஆறடி அகலம், பத்து அடி நீளமகொண்ட ஒரு இடம்; இதற்கு மாதம் 15 ரூபாய் வாடகை தரச் சொல்லி, சொந்தக்காரர் துன்புறுத்துகிறார். ஐயனே! மாதமெல்லாம் உழைத்தால்கூட எனக்குப் பதினைந்து ரூபாய் கூலி கிடைக்காது—என்று ஒரு ஏழை அழுகுரலிற் கூறி இருக்கிறான் பண்டிதரிடம்.

இந்தப் பரிதாபகரமான காட்சியைக் கண்டுதான், பண்டிதர் கலங்கிப்போய் உருக்கமுடன் பேசியிருக்கிறார். பேசினார்! அவ்வளவுதான்! சாக்கடை ஓரத்திலேதான் இன்றும் அந்தப் போக்கிடமற்றவர்கள் வதைபட்டுக்கொண்டு கிடக்கிறார்கள்.

இந்த வேதனை தரும் சம்பவத்திலே, ஒரு வேடிக்கையும் இணைந்து கிடக்கிறது.

நேரு பண்டிதரை, இந்தச் சேரிகளைக் காண அழைத்துச் சென்றவர் — சேரிகளில் வீடுகள் கட்டி வாடகை வாங்கும் ஒரு முதலாளி!

நான்தான் இந்த வீடுகளைக் கட்டித் தந்தேன்என்று அவர், தம் பிரதாபத்தை, பண்டிதரிடம் கூறியிருக்கிறார்.

இந்த நாற்றம் நெளியும் நண்டுவளைகளைக் கட்டியதற்காக, அடுத்த ஆண்டு பத்மவிபூஷண் பட்டம் எதிர்பார்த்தாரோ என்னவோ, யார் கண்டார்கள்!

மனம் பதறிப்போன பண்டிதர் நீ கட்டிய வீடுகளா இவை? வீடுகளா இவை? இவைகளைக் கொளுத்திப்போடவேண்டும்—என்று கோபமாகக் கூறியிருக்கிறார்.

கோபம் கொப்பளிக்கிறது, சோகம் மேலிடுகிறது; மனம் பதறுகிறது, பரிவும் சுரக்கிறது; சூள் உரைக்கிறார், அன்புரையும் அளிக்கிறார் பண்டிதர், ஆனால் எல்லாம் நாடகமேடைக் காட்சி போலக் காணக் கிடைக்கிறதேயல்லாமல், வேறு உருவான பலன் காணோம். பேசுகிறாரே தவிர, இந்த இழிநிலைகளைப் போக்கத்தக்க நடவடிக்கைகளை, தீவிரமான, புரட்சிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் துணிவைச் செயலிலே காட்ட மறுக்கிறார், பண்டிதர். அன்று அந்தச் சேரியைக் காணச் சென்றபோது, எப்படி இந்த அவதிதரும் நிலைமைக்கு யார் காரணமோ அந்த முதலாளியே, பண்டிதருடன் சென்றிருந்தானோ, அதுபோலவே, பண்டிதரின் ஆட்சியில் அவதிக்கும் அல்லலுக்கும் அலங்கோலத்துக்கும், யார் காரணமோ, அந்த ஆள்விழுங்கிகளும் பணமூட்டைகளும்தான், சதா பண்டிதரைச் சுற்றி நின்று சோடசோபசாரம் செய்கின்றனர்! இந்நிலையில் சேரியைக் கண்டு, பண்டிதர் சோகம் மேலிட்டு என்ன பலன்? சீறிப் பேசி என்ன பலன்? நாடகத்தில் உள்ளம் உருக்கும் ஓர் காட்சி! வேறென்ன?

“ரசமான கட்டம்! அபாரமான நடிப்பு! — என்று நாடகக் காட்சி கண்டு ரசிகர்கள் பாராட்டுவது போல, நேரு பண்டிதருக்கு ஏழை மக்களிடம் அன்பு சுரக்கும் தன்மைபற்றி துதிபாடுவோர் பாராட்டுவர்; நிலைமையோ, மாறுவதில்லை.

சேரிகளை ஒழித்துக் கட்டவேண்டுமென்று பேசிய நேரு பண்டிதர், அதேவிதமான உணர்ச்சிவயப்பட்டு, ஜாதியை ஒழித்தாக வேண்டும் என்றும் முழக்கமிட்டிருக்கிறார்; பழமையின் பிடியில் சிக்கி மக்கள் பாழாகிறார்கள் என்பதையும் இடித்துரைத்திருக்கிறார்; உலகம், விஞ்ஞான ரீதியில் எவ்வளவோ முன்னேறிவிட்டிருக்கும் இந்த நாட்களிலே ‘கர்நாடக’ மனப்பான்மை கொண்டு கிடக்கலாமா என்று கேட்டிருக்கிறார்! ஏறத்தாழ நாம் பேசும் பாணியிலேயே பேசியிருக்கிறார்.

“பொது உடைமை என்றும் சமதர்மம் என்றும் சுலோகங்களை முழக்கிக்கொண்டு இருக்கிறார்கள் நம்நாட்டு இளைஞர்கள்; காண்கிறேன். ஆனால் 400, 500 ஆண்டுக் காலத்துக்கு முன்பு இருந்துவந்த கருத்துக்களைக் கட்டித் தழுவிக்கொண்டு உழல்கிறார்கள்” என்று கேலிசெய்திருக்கிறார்.

“எந்த நூற்றாண்டிலே நீங்கள் வாழுகிறீர்கள்? 20-ம் நூற்றாண்டிலா? 18-ம் நூற்றாண்டிலா? 10-ம் நூற்றாண்டிலா? எதில் வாழுகிறீர்கள்? அதற்குப் பதில் கூறுங்கள்; அதை ஆதாரமாகக்கொண்டு

<u>முகப்பில்</u>

அமெரிக்கா—சுமார் 500 ஆண்டுகளுக்குமுன்பு இருந்தஇடமே தெரியாது. 1492ல் கொலம்பஸ்என்னும் ஸ்பெயின் நாட்டான் கண்டுபிடித்த பிறகே, உலகு அறியலாயிற்று அப்பூமியை. மதக் கொடுமை தாங்காதவர்களும், பிச்சைக்காரர்களும், இந்தப்புது உலகுக்கு அழைத்துச்செல்லப் பட்டனர் இங்கிலாந்திலிருந்து! அதுபோலவே, ஸ்பெயின்தேசத்தாரும், பிரெஞ்சு நாட்டாரும், பிறரும், அங்குபோய் விருப்பமான இடத்தில் குடியேறினர்.

இப்படிக் குடியேறிய அந்த பூபாகம், இன்று உலகமே கண்டு அஞ்சுமளவுக்கு உருவெடுத்துள்ளது! ஆனால், இவர்கள் அங்கு புகுமுன் வாழ்ந்த பூர்வ குடிகள் இருக்கிறார்களே, அவர்களது வாழ்வு செம்மைப்பட்டுவிட்டதா என்றால் ‘இல்லை’ என்றுதான் கூறவேண்டும். அதன் ஒரு காட்சியைத்தான், ஏட்டின் முகப்பில் நீங்கள் காண்கிறீர்கள். கொலம்பஸ் முதன் முதலில் அமெரிக்கத் தீவைக் கண்டபோது, தான் இந்தியாவைக் கண்டுபிடித்ததாகக் கருதினானாம்! அதனால் அங்கு வாழ்ந்த பூர்வகுடிகளையும் இந்தியர்கள் என்றே அழைத்தானாம்!!

அதுமுதல், அமெரிக்காவின் பூர்வகுடிகள் இந்தியர் என்றே அழைக்கப்படுகின்றனர்! அவர் தம்நிறம், சிவப்பாயிருப்பதால் செவ்விந்தியர் என்றே அழைக்கப்படுகின்றனர். அவர்களில் ஒரு வயோதிக உருவினரின் தோற்றமே, இது. தலையிலணிந்திருப்பது, கழுகுகளின் சிறகுகள்! அவர்களுக்கெனத் தனிமதம், கடவுள்நம்பிக்கை எல்லாம் உண்டு. அமெரிக்க பூபாகத்தின் பல இடங்களிலும் பரவிக்கிடக்கும் இவர்களது தொழில், மீன் பிடித்தலும் வேட்டையாடுதலும் தான். மலை, காடு, மின்னல், இடி, முதலியவைதான் இவர்தம் தெய்வங்களாம். அம்பு எய்துவதில் இன்னும் இவர்களை மிஞ்ச முடியாது.

பூர்வகுடிகள், இவர்கள்! அவர்கள உருவமே, அவர்களுடைய நிலைமையை விளக்குகிறது நமக்கு! அவர்களிருப்பது, உலகை மிரட்டும் அமெரிக்காவில்தான்!!

நான் பேசுகிறேன்" என்று பாட்னாவில் பேசுகிறார்.

பல்லாயிரக் கணக்கான மக்கள் பழமையின் பிடியில் சிக்கிச் சீரழிகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டிப் பேசியிருக்கிறார்.

பழைய காலம், பழைய காலம் என்று ஏங்கிக்கிடக்கிறீர்களே — எங்கே இருக்கிறது அந்தப்பழைய காலம்—என்று கேட்டுப் பரிகாசம் செய்திருக்கிறார்.

ஒரு ஆகாய விமானம் செய்வதானால் பழையகால முறையையா கையாள முடிகிறது? என்று கேலி செய்கிறார், அறிவு கொளுத்த.

முன்னேற வேண்டுமானால், பழயகால எண்ணங்கள் நம்மைச் சிறைப்படுத்த விடக்கூடாது—என்று புத்தி புகட்டுகிறார்.

இவ்வளவு தெளிவுபடைத்த பகுத்தறிவாளர் இருக்கும்போது நமக்கென்ன குறை என்று ஒரு கணம் எண்ணி மலைக்கத் தோன்றும், அவ்வளவு 'இங்கர்சால்' பேசுகிறார்.

ஆனால், இந்தப் பழைமையின் பிடி போட்டப்பட இவர் எடுத்துக் கொள்ளும் முயற்சி என்ன? முறியடிக்க இவர் என்ன செய்கிறார்?

வேறு எதும்கூட அதிகம் செய்யவேண்டாம். தீதே பயக்கத் தக்க கருத்துகளை ஊட்டும் பழமை நெறியும் ஏடுகளை மக்கள்மன்றத்திலிருந்து அப்புறப் படுத்தலாம், பழமைக் கருத்துகள், பாமரரைப் பாழ்படுத்துவது மட்டுமல்ல, படித்தவர்களையே பாமரராக்கி விடுகிறது — அந்தக் கருத்துகளின் மீது கட்டப்பட்டுள்ள திருவிழாக்களைக் கண்டிக்கலாம்; இன்ன குளத்திலே மூழ்கினால் புண்யம் கிடைக்கும், இன்ன மரத்தைச் சுற்றினால் மகப்பேறு கிட்டும், இன்னவிதமான பலிகொடுத்தால் இந்த விதமான வரம் கிடைக்கும் என்று நம்பி, மக்கள் சில பல காட்டுமிராண்டித் தனமான திருவிழாக்களிலே ஈடுபடும்போதாவது இவர் அவர்தம் அறியாமையைக் கண்டிக்கிறாரா? இல்லை! மாறாக, இவரே ராம்லீலாவிலும் கும்பமேளாவிலும் கலந்துகொள்கிறார்—ஹோலி பண்டிகையில் உற்சாகமாகக் கலந்துகொண்டு, சோவியத் நாட்டு மிகாயன் வந்தால் அவர் நெற்றியிலேயே குங்குமம் பூசிக் குழந்தைபோலக் குதூகலிக்கிறார்.

பழமை கூடாது—பத்தாம் பசலி புத்தி கூடாது — என்று கேலி பேசுபவரே, ராம்லீலாவிலும் கும்பமேளாவிலும் உற்சாகமாகக் கலந்துகொள்கிறார் என்றால், தெளிவும் துணிவுமற்ற பாமர மக்கள் என்ன செய்வார்கள்!

பகுத்தறிவு பேசும் கட்டம்—மேளாக்களிலே கலந்து மகிழும் கட்டம்—இரண்டிலுமே பண்டிதர் மக்களைச் சொக்கவைக்கிறார்—என்றுதான் எண்ணிப் பூரிப்பார்கள். பகுத்தறிவு வெற்றிபெறுது!

இந்தியாவின் பண்டைப் பெருமையையும் சமஸ்கிருதத்தின் அருமையையும் குறித்து, தின்கர் என்ற இந்தி மொழிக் கவிஞர் ஓர் ஏடு தீட்டினர் — அதற்கு மதிப்புரை அளித்தார் நேருபண்டிதர்.

சொல்வேறு — செயல்வேறு என்று நாம் இருந்துவருகிறோம். உத்தமமான, உயர்தரமான கருத்துகளைப் பிறருக்கு உபதேசம் செய்கிறோம்—நடவடிக்கையிலேயோ நாம், வேறு விதமாக நடந்துகொள்கிறோம். இந்த 'இரட்டை மனம்' நமக்குச் சாபக் கேடாக அமைந்து கிடக்கிறது — என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மற்றவர்கள் விஷயம் இருக்கட்டும்—நேருபண்டிதர் விஷயமே இதுபோலத்தானே இருக்கிறது!

சேரிகள் ஒழிக்கப்படவேண்டும் என்றும் முழக்கமிடுகிறார் — நாடு சேரியாகும் வகையில் சுரண்டிக் கொழுக்கும் 'சேட்டு' மார்க்களிடம் குலவுகிறார்.

பழமையின் பிடியில் மக்கள் சிக்கிச் சீரழிவதையும் கண்டிக்கிறார்—கும்பமேளாவில் கலந்துகொண்டு குதூகலிக்கவும் செய்கிறார்.

இந்நிலையில், மக்கள் எத்தகைய அறிவு பெறமுடியும்?

சைவத்தைத் துளியும் சிதைத்துக்கொள்ள விரும்பாத ஒரு இளைஞர் குறித்து ஓர் தகவல் உண்டு; வாலிபத் துடிப்பு அவரை ஒரு வழுக்கிவிழுந்த வனிதையின் இல்லத்துக்கு அழைத்துச் சென்றதாம்—ஆனால் அங்கு சென்றாலும் சைவ ஆசாரத்தைமட்டும் இழந்துவிட அந்த இளைஞருக்கு மனமில்லை—எனவே அவர் அங்கு செல்லும்போதெல்லாம் (தன் சைவ ஆசாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக) ஒரு செம்பு 'சுத்த ஜலம்' வீட்டிலிருந்தே எடுத்துக்கொண்டு போவாராம்—அங்கே அந்த ஜலத்தைத்தான் சாப்பிடுவாராம்!

வாலிப முறுக்குக்கும் விருந்து—சைவத்துக்கும் தகுந்த பாதுகாப்பு!

வாலிபப்பருவத்தின்போது இது—ஒரு நண்பருக்கு.

நாடாள்கிறார் நேரு — அவர் சொல் கேட்டு இலட்சக்கணக்கான மக்கள் சொக்கிக்கிடக்கிறார்கள்—இந்நிலையில் இவருக்கு என், சொல்வேறு, செயல்வேறு—ஏன் [illegible]

ரசமான கட்டம்! அபாரமான நடிப்பு! என்று சொல்லத்தக்க வகையில்தான் இருக்கிறது, நேரு பண்டிதரின் பகுத்தறிவுப் பிரசாரமும், சமதர்மப் பிரசாரமும்.

★

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளித்தனர். இப்போது, நாகநாடு இந்தியாவில் ஒரு பகுதியாகத்தான் இருந்து வருகிறது என்றும் வெளிநாட்டிலாகாவினர் கூறினர்.

ஐக்கிய நாடுகள் சபையில் நாகநாடு சுதந்திரம் பற்றிய பிரச்சினையை எடுத்துக் கூறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டால், அதன்படி செய்வீர்களா?" என்று கேட்கப் பட்டது.

எதற்காக அந்த யூகமெல்லாம்?—என்று கூறிவிட்டு, பாகிஸ்தானுக்கு இப்போது உள்ள கவலை எல்லாம் காஷ்மீர் பிரச்சினைப்பற்றித்தான்—பாகிஸ்தானுக்கு நேரடித் தொடர்புள்ள பிரச்சினை, காஷ்மீர்தான்" என்று, பாகிஸ்தான் வெளிநாட்டிலாகாவினர் கூறிவிட்டனர்.

பாகிஸ்தான், நாகநாடு கிளர்ச்சியில் ஆதரவு காட்டவில்லை என்பது விளக்கப்பட்டிருக்கிறது என்றபோதிலும், அத்தகைய ஓர் நிலைமை எழக்கூடும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதாலேயே, பிரச்சினை கிளம்பி இருக்கிறது என்பது விளக்கமாகிறது.

பாகிஸ்தானுக்கு எதிராக நடத்தப்படும் பக்தூனிஸ்தான் கிளர்ச்சியில், இந்திய சர்க்கார், பக்தூன் கிளர்ச்சிக்குப் பரிவு காட்டுவது அனைவரும் அறிந்ததே. இதையே காரணமாகக் கொண்டு, நாகநாட்டு கிளர்ச்சியை நாங்கள் ஆதரித்தால் என்ன என்று பாகிஸ்தான் வாதாடக்கூடும். ஐக்கிய நாடுகள் சபையிலும், வெளிநாடுகளில் நடைபெறும் மாநாடுகளிலும், இனி நாகநாடு கிளர்ச்சி குறித்து, பாகிஸ்தான் எடுத்துக்காட்டி, இந்தியா எதேச்சாதிகாரப் பாதையில் செல்கிறது என்று குற்றம் சாட்டினாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒன்று புரிகிறது. நாகநாடு விடுதலைக் கிளர்ச்சி, மற்றோர் கட்டம் புகுந்திருக்கிறது.

சர்வதேசப் பிரச்சினையாக வடிவமெடுக்கிறது.

மலை வாழ் மக்களால், இவ்வளவு மகத்தான தேசீய ஆர்வம் காட்ட முடிகிறது,

ஆற்று வளமோ, வரலாற்றுப் பெருமையோ, இயற்கைச் செல்வ வளமோ திராவிடத்துக்கு உள்ளது போல நாகநாட்டுக்குக் கிடையாது. குன்றும் — காடுகளும் — அங்கு குமுறிக் கிளம்புகிறது, பல நாடுகள் கூடிடும் மாமன்றங்களின் கவனத்தையும் ஈர்க்கும் வகையிலே, தேசியக் கிளர்ச்சி.

இங்கு......!!

உற்ருர் உறவினர் கிடையாது, ஊரோ முற்றிலும் புதிது, அருகிலோ தான் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த பாலகர்கள் இருவர், கைவசமோ காசு கிடையாது; இந்த நிலையிலே அமெரிக்காவின் பெருநகர்களிலே ஒன்ருன லாஸ் ஏஞ்சல்ஸுக்குள் அடியெடுத்து வைத்த இந்தப் பெண்மணி பதினெட்டு மாதங்களுக்கெல்லாம் பத்து இலட்சம் ரூபாய் பணத்தோடு பாரெல்லாம் வியக்கும் புகழையும் பெற்ருள்! "ஓகோ! பெரிய திரைப்பட நடிகைபோலும்" என்று நினைக்கக்கூடும் வாசகர்கள், அல்ல, அல்ல. அவ்வளவு பணத்தையும் இவள் சம்பாதிக்கவில்லை; சீடகோடிகள் கொண்டுவந்து கொட்டினர்.

ஒரு காலத்தில் சீந்துவாரற்றுத் திரிந்த இந்த அம்மணியை நோக்கி சீமான்களும் சீமாட்டிகளும், படையெடுக்கலாயினர்! கடைத்தெருக்களிலும் வீதிகளிலும், கவனிப்பாரற்று அலைந்த இவரைக் காண்பதற்காக இலட்சோப லட்சம் கண்கள் அலையலாயின! "சகோதரி எய்மி பேசுகிருர்" என்ருல், அதைக் கேட்கத் திரண்ட மக்களைக் கட்டுப்படுத்த ஆயுதம் தாங்கிய போலீசார் வரவேண்டியதாயிற்று!! அவ்வளவு கீர்த்தி பெற்றுவிட்டார். இருக்க இடம் கிடைக்குமோ என்று அலைந்த அவருக்கு, ஓராண்டுக்கெல்லாம், அவருடைய சீடர்கள் பத்து லட்சம் ரூபாய்க்குமேல் பணம் போட்டு மாளிகையொன்றை எழுப்பித் தந்தார்கள்.

பேரறிஞர் இங்கர்சால் பிறந்த கிராமத்துக்கு அருகில்தான் இவரும் பிறந்தார்—அமெரிக்காவில். ஏழ்மையில் உழன்ற இவருக்கு சீமாஞ, மணவாளஞகக் கிடைப்பான்? வயது வந்ததும், ராபர்ட் செம்பிள் எனும் ஒரு மதப் பிரசாரகர் மணந்தார்! சீனுவுக்கு கிருத்துவ மதப்பிரசாரத்துக்காகக் கணவர் சென்றபோது, இவரும் போனுர். அங்குபோன இரண்டாண்டுகளுக்கெல்லாம் கணவர் இறக்கவே, இருவருக்கும் பிறந்த ஒரு குழந்தையுடன், சீனுவில் திண்டாடலானுர். திரும்பிச் செல்லலாம் அமெரிக்காவுக்கு என்ருலோ, பணமில்லை கையில்! சீனுவில், ஒவ்வொருவரையும் கெஞ்சி பணம் சேர்த்துக் கொண்டு அமெரிக்கத் தலைநகரான நியுயார்க்குக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த பலசரக்குக் கடைக்காரர் ஒருவருக்கும் இவருக்கும் தொடர்பு ஏற்படவே, இருவரும் மறுமணம் செய்துகொண்டு ஆருண்டுகள் வாழ்ந்தனர். குழந்தை இன்ஞென்று பிறந்தது! குடும்பத்தில் இருவருக்கும் மனக்கசப்பு ஏற்படவே, விவாகரத்து செய்துவிட்டு இந்த அம்மையார், தன்னுடைய இரு குழந்தைகளுடனும் நியுயார்க்கை விட்டுக் கிளம்பி லாஸ் எஞ்சல்சுக்கு வந்து சேர்ந்தார்—பசி, பட்டினி இவைகளோடு! இப்படி வந்தவர்தான் பார் புகழும் பெயரும் பணமும் பெற்ருர் ஓராண்டுகளுக்குள்!

முதல் கணவர் மதப் பிரசாகராகயிருந்ததால் இவருக்கு அத்துறையில் கொஞ்சம் பயிற்சியிருந்தது. அதனுல், தெருவில் நின்றுகொண்டே, "பேரின்பம் பெறவேண்டுமா? கர்த்தரின் பேரருள் சித்திக்க வேண்டுமா? வருக! வருக!!" என்று கூவி அழைத்துக் கூட்டத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு, சொற்பொழிவாற்றலானுர். குரலும், உருவும் இவருக்கு மிகவும் பயன்படலாயிற்று! கூட்டமும் திரண்டு வந்து கேட்கலாயிற்று!! இப்படி தெருவில் ஆரம்பிக்கப்பட்ட பிரச்சாரம் ஊரெங்கும் பரவி, ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்கும் நிலை ஏற்பட்டு, மதத்துறைக்குக் கிடைத்துள்ள ஒரு மாணிக்கம் என்கிற விளம்பரம் ஏற்பட்டு, மிகவிரைவில் பல்லாயிரக்கணக்கான சீடகோடிகள் ஏற்படலாயினர் அதனுல், காணிக்கைகளும் குவியலாயின! அவர் வாழ்வதற்கென திருத்தலமும் கட்டித் தந்தனர், மத அபிமானிகள்! அத்தலத்திலே, இவர் தரிசனம் காண்பதற்காக நீண்ட நேரம் காத்துக்கிடப்பார்களாம், மக்கள். இடம் கிடைப்பது அருமையாம். தலம் நிரம்பியதும், கதவுகள் சாத்தப்பட்டு, இவருடைய சொற்பொழிவு துவக்கப்படுமாதலால் பலர் இடமின்றி ஒவ்வோர் நாளும் திரும்புவார்களாம்! எங்கோ அலைந்துதிரிந்த அம்மை, மதப்பிரசாரகர் ஆனதும், இவ்வளவு பாக்கியவதியாஞர்! அவர் அலைந்து திரிந்தபோது கவனிக்க மறுத்த கனவான்களும் அவர் காலடியில் தெண்டனிட ஓடினர்.

1926 மே 18-ந்தேதி பசிபிக் பெருங்கடலில் குளிக்கப்போன இவர் காணுமற்போய்விட்டார்! கலிபோர்னியாவே கிடுகிடுத்தது இச்செய்தி கேட்டு. மத அபிமானிகள் எல்லாம், இதுபற்றியே பேசலாயினர். சீடகோடிகள் எல்லாம் கடற்கரைக்குச் சென்று, கடலலைகளைப் பார்த்து அங்கே தமது 'அன்னை' யிருப்பதாக எண்ணி அழுதனர்—தொழுதனர். பலர், கடலுக்குள் மூழ்கித் தேடவுமாயினர்—விமானங்கள், கடலுக்குமேல் பறந்து ரோந்துவரலாயின. இப்படித் தேடிடும் முயற்சியிலீடுபட்டு ஒருவர் இறந்தார்—ஒரு பெண், 'அன்னை'யைப் பிரிந்த சோகத்தால் மாரடைத்து செத்தாள்—சர்க்காருக்கோ பெரிய தலைவலியாயிற்று; கடலை நோக்கி வருபவர்களைத் தடுத்து நிறுத்தலானுர்கள். இவ்வளவு தூரம் தன் மறைவால், ஊரைக் குலுக்கிவிட்ட இவர் 32 நாட்களுக்குப் பிறகு மெக்சிகோவிலுள்ள ஒரு கிராமத்திலிருப்பதாகத் தெரியவந்தது. "குழந்தையொன்று சாகக் கிடக்கிறது, நீங்கள் வரவேண்டும் என்று ஒரு பெண் அழைக்க அவளுடன் போனேன். திடீரென ஒரு சிலர் என்னைத் தூக்கி ஒரு காரில் போட்டுக்கொண்டு போய் பாலைவனத்தில் போட்டுவிட்டனர். மயக்கம் தெளிந்து பார்த்தால், என்னை நன்ருகக் கட்டிப்போட்டிருப்பது புரிந்தது. வாயாலும், கையாலும் கட்டுகளை அறுத்துக்கொண்டு, அந்தப் பாலைவனத்தை கடந்து 31-நாள் கழித்து வந்து சேருகிறேன்" என்று அவர், விபரம் தெரிவித்தார். அது கேட்ட அவரது சீடகோடிகள், 'ஆகா! ஊகூ! எமது எய்மி தேவாம்சம் பெற்றவர். அவர் பெருமையே பெருமை' என்று கூத்தாடலாயினர். ஆனுல், பலருக்கு சந்தேகம் ஏற்படலாற்று. இது நடந்திருக்குமா? ஆடை, காலணி யெல்லாம் புதிதாக இருக்கிறதே? 18-மைல் பாலைவனத்தில் நடந்ததாகச் சொல்லுகிருளே? எப்படி நம்புவது?—எனக் கேட்கலாயினர்.

பிரச்னை பெரிதாகி, 'மக்களை ஏமாற்றுகிருள்,' என்று குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டார்.

அதற்குப் பிறகு, அவருடைய 'வேடம்' பலருக்குப் புரியலாற்று. ஆயினும், அதனை வெளியில் எடுத்துக் கூற அஞ்சினுர்கள். அப்படி எடுத்துச் சொன்னுல், கிருத்துவமதத்தையே அல்லவோ எதிர்ப்பதாக நேரும்! அதனுல்!!

2-வது
தி. மு. க. மாநில மாநாடு

மே 17, 18, 19, 20 தேதிகளில்	பெரிய இரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள பந்தயத் திடலில் 'வள்ளுவர் நகர்' அமைக்கப்படுகிறது.	திருச்சி 'வள்ளுவர்' நகரில்

தலைவர்: **இரா. நெடுஞ்செழியன்**

திறப்பாளர்: **ஜி. பி. சோமசுந்தரம்**

வரவேற்பாளர். **அம்பில்-தர்மலிங்கம்**

★

கலை விருந்தளிப்போர்

திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்	கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்	நாகூர் அனீபா
எஸ். எஸ். இராசேந்திரன்	ஜி. கஸ்தூரி
டி. வி. நாராயணசாமி	பி. எஸ். செல்வா

திராவிடத் தலைவர்கள் அனைவரின் கருத்து முழக்கம் உண்டு.

★

மாநாட்டுக் கட்டணம்

நான்கு நாட்களுக்கும் சேர்த்து:-	ஆண்	பெண்	தனித்தனி ஒவ்வொரு நாளும்:-	ஆண்	பெண்
முதல் பிரிவு	10—0—0	10—0—0	முதல் பிரிவு	3—0—0	3—0—0
இரண்டாவது பிரிவு	5—0—0	2—8—0	இரண்டாவது பிரிவு	1—8—0	0-12—0
மூன்றுவது பிரிவு	3—0—0	1—8—0	மூன்றுவது பிரிவு	1—0—0	0—8—0

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.